www.tamilarangam.net

Raya

# இசை



P. RAYA
87 RUE DE COLOMBES
92600 ASNIERES SUR -
SEINE : FRANCE

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## இந்த இதழில்..


எங்கள் எதிர்காலம் ?
... ஆசிரியர் குழு
ஒரு பாடல்..
... ஈஸ்வரி
நாங்களும் நாங்களும்
... சசி. யசோதரன்
NOTHING BUT...
... கறுத்தான்
எதிர்பார்ப்பு
... சு. கருணாநிதி
தலைநகரின் தரிசனம்
... டானியல் ஜீவா
சி. வைத்திலிங்கம்
... எஸ். அகஸ்தியர்
மகாபாரதம்
... கி. பி. அரவிந்தன்
சின்னாச்சிக்கிழவி
... அஜித்குமார்
ஆரொடு நோக..
... புவனன்
என்னதான் நடக்கிறது ?
... ஜனிக்ராஜ்
சின்னச்சின்ன...
... ஆர். தேவகுமார்
மரபும் புதுமையும்
... சி. சிவசேகரம்
ஆடைகள்
வாங்குவதற்காக...
... பிரபா மணாளன்
கவிதைகள்
... கி. பி. அரவிந்தன்



ஓவியங்கள் : சாம்சன்
கணனி பதிப்பு : கலக்ஷினி
வடிவமைப்பு : புவனன்




www.tamilarangam.net

# ஓசை

காலாண்டிதழ்

1991

ஆடி - புரட்டாதி

ஓசை 2
ஒலி 3

இதழ் 7

ஆசிரியர் குழு

தொடர்புகளுக்கு:

' OSAI ',
C/O S.THIRUCHELVAM,
20, RUE DE LA FOLIE MERICOURT,
75011 PARIS,
FRANCE.

## எங்கள் எதிர்காலம்..



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



* 'நாங்கள் புலம் பெயர்ந்தவர்களா ? அல்லது புகலிடம் கோரியவர்களா?'முளைவிட்டரும்பிய விவாதம் முற்றுப்பெறுமுன்னரே....!

* மேலே உள்ளபடம் அண்மையில் பாரீஸ் விமானநிலையத்தில் வந்திறங்கி அகதி அந்தஸ்து கோரிய மூன்று இலங்கையர்கள் கைவிலங்கிட்டுத் திருப்பி அனுப்பப்படுகின்றார்கள்.

* வரலாறுகளும், அனுபவங்களும் எங்கள் எதிர் காலம் எங்கள் மண்ணிலேதான் என்பதனை இறுக்கமாக உணர்த்தி வருகின்றன.

* இந்த நாடுகளில் இரண்டறக்கலக்க எம்மில் பலர் எடுக்கும் அதீதமுயற்சிகளும் பயனற்றவை என்பதனை இனிவரும் காலங்கள் இன்னும் அழுத்தமாகவே உணர்த்தும்!

- ஓசை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# ஒரு பாடல்..

இந்த இராப்பொழுது ஒருபோதும் விடியாதோ
கூடை கவிழ்த்தாப்போல் கும்மிருட்டுக் குலையாதோ
வானந் தெரியாதோ கார்மேகம் விலகாதோ
வெள்ளி முளைக்காதோ சூரியனும் உதியாதோ
ஆந்தை அலறுறது ஒருபோதும் முடியாதோ
நரியள் இடும் ஊளை நாள்முழுதும் ஓயாதோ
சவங்கள் அழுகிற மணமெண்டுங் குறையாதோ
ஓலம் அழுகுரல்கள் ஒருநாளும் அடங்காதோ

இரவுக்கு அங்காலே இன்னுமொரு நாளிருக்கு
இருட்டுக்கு அங்காலே ஒளியிருக்கு பகலிருக்கு
மேகத்துக் கங்காலே நிலவொண்டு வரவிருக்கு
மின்னுகிற வெள்ளிகளும் முடிஞ்சொழிஞ்ச பின்னாலை
தாமிரமுத் தங்கமுமாச் சூரியனும் இடையிடையே
நிறநிறமா வானவில்லு வாறதுக்கும் வழியிருக்கு
ஆந்தைநரி வெருண்டோடக் கூவுகிற சேவலுக்குக்
குரலிருக்குக் கேட்டுழும்பிக் கதறுகிற பசுவிருக்கு
புயலுக்குப் பின்னாலே பூங்காத்து வரவிருக்கு
போருக்குங் கொடுமைக்குஞ் சுறுக்கணையோர் முடிவிருக்கு
சனங்களெல்லாந் துணிந்தெழும்பிச் சண்டியரை அடக்குவினை
துவக்கெடுத்த துரைமாரை துாணோடை கட்டுவினை
குண்டெறியுங் கொலைகாரக் கூட்டத்தை வெல்லுவினை
ஓலத்துக் கங்காலே ஓங்கியொரு குரலெழும்பும்
அழுகைக்கு அங்காலே அஞ்சாத நெஞ்சுயரும்
கெட்டவொரு கனவெண்டு கொடுமையளும் போயொழியும்
சுட்டெரிச்சு இடிச்சழிச்ச யாழ்ப்பாணம் தலைநிமிரும்.

- ஈஸ்வரி

www.tamilarangam.net

# நாங்களும் நாங்களும்

மேல் மூச்சுகீழ் மூச்சு வாங்க ஓடி வந்து எனது லைனில் நின்ற போதும் பயம் என்னை விட்டு விலகியதாயில்லை. அவன் கையில் இருந்த துவக்கு என்னை மிரட்டிக்கொண்டேயிருந்தது.

இவ்வளவு கஷ்டப்பட்டு உழைத்து க்கறுவல்களிடம் பறிகொடுப்ப தைவிட உழைக்காமலே இருப்பது மேலாகவே பட்டது - அந்தவே ளையில் எனக்கு.

'உழைக்காமலே இருந்து விட் டால் வாழ்வுக்கு வழி?'

'சீ...ஒவ்வொரு பிரச்சினையாய் முடித்துப் பரிசில மெதுவாக நிமிர இந்தக் கறுவல்களின்ர தொல்லை'

'இந்த நாட்டிலும் நிம்மதியாய் வாழேலாது' என் மனம் இறுக்க மாகவே சொல்லியது.

எனது லைனுக்குள் வந்து நின்ற போதும், என்னைத் துரத்திய கறுவலையே என் கண்கள் தேடிக்கொண்டிருந்தன.

அவனைக் காணவில்லை. திரும் பிவிட்டான் போலிருந்தது.

சினந்து, சலித்து, மிரண்டு வெருண்டு கொண்டிருந்த எனக்கு வைகுந்தன் போல் ஒரு உருவம் தெரிய நெருங்கினேன்.

வைகுந்தன்! வழமையை விடச் சற்று வித்தியாசமாக கலகலப்பாக இருந்தான்.

நெஞ்சுடன் இறுகக்கட்டிய கைகள், விரல்களுக்கிடையில் செருகிய புத்தகம். கால்களைச் சற்று அகட்டி அவன் நின்றபோது அவன் உயரத்துக்கு எடுப்பாகவே இருந்தது.

புன்னகை ஒன்றை உதிரவிட்ட வாறே "என்ன யசோ! பேய றைஞ்ச மாதிரி வெருண்டு போய் வாறாய்?" என்றான்.

நீண்ட நாட்களாகவே தேடித்தி ரிந்த வைகுந்தன் அதுவும் அன்று - அந்த இடத்தில் கிடைத்தது மட் டற்ற மகிழ்ச்சியாக இருந்தது - பயத்தினூடும்.

வழமை போல் சுகநலங்கள் விசா ரித்துக்கொண்டிருக்கவில்லை. நேரடியாகவே விஷயத்தைத் தொடக்கினேன்.

"இவங்கள் 'கறுவல்'களை என் னடாப்பா செய்யிறது! றோட்டு வழிய நிம்மதியாத் திரிய விடுறாங் களில்லை."

எனது கேள்விக்குச் சிரிப்பைப் பதிலாக்கி முகட்டை வெறித் தான்.

அவனுடைய மூக்குக்கண்ணாடி கீழே விழுவது போலிருக்கச் சரிப் படுத்திக் கொண்டவன், மீண்டும் மெதுவாகச் சிரித்தான்.

எனக்கு எரிச்சலாக வந்தது .

"நான் என்னவோ கேக்கிறன் நீ நக்கல் சிரிப்பு சிரிக்கிறாய் என்ன!



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஆத்திரத்தோடு கேட்டேன்.

"சரி சொல்லு" என்றான் கொஞ்சம் சீரியஸ்ஸாக.

"இப்ப கொஞ்சமெண்டால் நான் சரி."

"ஏன் என்ன நடந்தது? "படக்கென அவன் கேட்டபோது விஷயம் அறியும் ஆவல் அவனுள் தெரிந்தது.

"ஒரு கறுவலடாப்பா - இருபது வயதிருக்கும். 'கொறஸ்பொண்டன்ஸ்' க்கை துவக்கைக் காட்டிக் காசு பறிக்கவந்தான்."

"பொய்த்துவக்காயிருக்கும்." அசண்டயீனமாகவே சொன்னான்.

"மண்ணாங்கட்டி, பொய்த்து வக்கோ என்னவோ பறிக்க வந்தவன் எண்டதுமட்டும் உண்மை. கத்தியும் வைச்சிருப்பான் தானே!"

"நீ என்ன செய்தாய்?"

"எப்பிடித்தைரியம் வந்ததெரியாது. தள்ளி விழுத்திப் போட்டு ஓடி வந்திட்டன்."

"உன்னட்ட காசு ஏதாவது இருந்ததோ?"

ஒப்றாக்காரன் கேள்வி கேட்பது மாதிரி வைகுந்தன் கேட்டுக் கொண்டே போனான்.

"மூவாயிரம் பிராங் - நாளைக்கு றூம் வாடை கட்டுறதுக்காக ரவியிட்ட கடனா வாங்கிக் கொண்டு வாறன்."

"இப்ப எத்தின மணி?"

"பன்ரெண்டு"

மணிக்கூட்டைப் பார்க்காமலே நேரத்தைச் சொல்லிவிட்டு அவன் முகத்தை நோக்கினேன்.

"ஆயிரம் பிராங்குக்கு மேல றோட்டில கொண்டு திரியக்கூடாது. பிரான்ஸில சட்டம் இருக்கு தெரியுமா!" வைகுந்தன் அதட்டினான்.

"அதுக்கு!" இது நான்.

"இப்ப சாமம் வேற."

"உன்ர கதை நல்ல கதையா இருக்கு. பிரான்ஸில சட்டமெண்டா பொலிஸ் அல்லோ எடுக்கவேணும் - அக்ஷன் இவயளிட்ட ஆர் சொன்னது இந்த வேலையைப் பார்க்கச் சொல்லி." ஆத்திரத்தோடு திருப்பிக் கேட்டேன்.

"அது சரிதான். ஆனால் நாங்களும் கொஞ்சம் அவதானமாக நடந்து கொள்ளலாம் தானே!" சொல்லிவிட்டுக் குழைந்தான் வைகுந்தன்.

வைகுந்தனை மடக்கிவிட்டது போல் எனக்குள் பெரிய திருப்தி. தொடர்ந்தேன்.

"போனகிழமை மெற்றோ ஓட ஓட ஒரு தமிழாளிட்ட சங்கிலி பறிச்சிருக்கிறாங்கள். மெற்றோக்க இருந்த மற்றச் சனங்கள் பார்த்துக் கொண்டு தான் இருந்திருக்கு. பரிஸ் பதினெட்டில பதினைஞ்சு பேரின்ரைக்கு மேல சங்கிலி அறுத்திருக்கிறாங்கள்."

வைகுந்தன் கடை வாய்க்குள் சிரித்தவாறு வேறுபக்கம் திரும்பிக் கொள்ள எனக்கு எரிச்சல் அதிகமாயிற்று.

"உன்ர நக்கலகப் பார்த்தால் இவையள் ஏன் சங்கிலி போட்டுக் கொண்டு திரியீனம் - பத்தாதுக்கு சேட்டையும் திறந்து காட்டிக் கொண்டு ...! அப்பிடித்தானே!" நானும் கிண்டல் தோரணையில்

www.tamilarangam.net

அதட்டினேன்.

"சரி சொல்லு" என்றான்.

தலை மேலும் கீழுமாய் அசைந்தது.

"போனமாசம் விடிய நாலரை மணிக்கு ஒரு பெடியன் சிலோனுக்குரெலிபோன் பண்ண எண்டு போயிருக்கு. ஒரு கறுவல் - மறிச்சுக் காசு கேட்டிருக்கிறான். பெடியனிட்டக் காசு இல்லை. இல்லையெண்டு சொல்லியிருக்கவேணும் கத்தியால குத்திப் போட்டுப் போட்டான்.

"பெடியன் !"

"சரி"

ஆச்சரிய விழிகளை விரித்தான் அவன்.

"இப்ப ஆறுமாதத்துக்கு முதல் அப்பாவிப் பெடியனொண்டை ஆத்துக்க தள்ளிவிட்டுக் கொல்லினாங்கள். இடைக்கிடை மர்மமான முறையில் கொலைகள் நடக்குது. தமிழாக்களுக்குள்ளேயே. தமிழாக்களே கறுவல்களைக் காசுக்கு வைச்சுச் செய்விக்கினம் எண்டும் சனம் கதைக்குது. இதுகளுக்குப் பிரெஞ்சுப் பொலிஸ் எதுவித அக்ஷனும் எடுக்காதோ!" கேட்டுவிட்டு வைகுந்தனைப் பார்த்தேன்.

"பிரெஞ்சு அரசாங்கத்தைப் பொறுத்தவரையில் நாங்கள் அழையா விருந்தாளிகள். நாங்கள் அடிபட்டடாலென்ன! செத்தாலென்ன! பிரெஞ்சுப் பொலிஸோ, பிரெஞ்சு அரசாங்கமோ பெரிதாக அக்ஷன் எடுக்கப்போவதில்லை. நேரத்தைச் செலவழிக்க விரும்பாது. எங்கட உழைப்பை உறிஞ்சமுடியும் வரைக்கும் உறிஞ்சும். எங்களால ஏதாவது நட்டம் வரேக்கத்தான் எங்களைப் பற்றி யோசிக்கும்."

"சரி அப்ப இந்தக் கறுவல்களின்ர தொல்லைக்கு என்னதான் முடிவு? வரவர ஆக மோசமாகிக் கொண்டல்லே போறாங்கள். தமிழாக்கள் கூட இருக்கிற இடங்களில அதுவும் பரிசுக்கு வெளியில இரவு ஏழு மணியெண்டால் வெளிக்கிடேலாதாம். றெயின் ரிக்கற் ஐக் கூடப் பறிக்கிறாங்களாம்"

"உண்மை தான் - பிரச்சினை தான். அதே நேரம் இன்னொரு பக்கத்தையும் ... நாங்கள் பாக்க வேணும்...."

"என்ன!என்ன!"

வைகுந்தன் புதுவிஷயமொன்றைச் சொல்லப்போகிறான். என்பதை அவனது இழுவை அழுத்த நான் அவசரமாகி கூர்மையாகி அவன் விழிகளை நோக்கினேன்!

"இந்தப் பிரச்சினையை ஒரு சமூகப் பிரச்சினையாகவும் பாக்க வேணும்"என்றான்.

என் கண்கள் அகல விரிந்தன. தொடர்ந்தான்.

"இலங்கைத் தமிழ்ச்சமூகத்தைப் பொறுத்த வரையில - அதாவது நாங்கள், எண்பதுகளின்ர ஆரம்பத்தில அல்லது அதுக்குப் பிறகு தான் இந்த நாட்டுக்குள்ள வாறம்- அகதிகளாக"

"ஓம்"

"ஆனால் கறுவல்கள் எங்களுக்கு முதலே இங்கை வந்து வாழத் தொடங்கினவங்கள்."

www.tamilarangam.net

"உண்மை."

"எங்கட சராசரித் தொழில் துறையாளை எடுத்துப் பாத்தால் - Cleaning வேலை, Reasturant-வேலை, Advertisment Papers விநியோகிக்கிற வேலை - அவங்கட தொழில் துறையோட ஒத்ததாகத் தான் இருக்கு. அதாவது அவங்களுக்குத் தொழில் ரீதியான போட்டிக்குவாறம்."

"நான் மறுக்கேல்ல"

"ஆனால், நாங்களும் வந்த பிறகு, தொழில் விஷயத்தில அவங்கட நிலைமை எப்பிடி இருக்கு? வேலையில்லாத ஒருத்தன் பாரிஸில சீவிக்கிற தெண்டால் எப்பிடி இருக்கும்?"

கண்களை மெதுவாகப் பூஞ்சியவாறு அவன் சர்வசாதாரணமாகவே கேட்ட இந்தக் கேள்வி என்னைச் செம்மையாகவே உதைத்தது.

"Cleaning Company களாயிருந்தாலென்ன, Reasturants ஆக இருந்தாலென்ன, எங்களோட போட்டி போட்டிக் கறுவல்களால வேலை செய்யமுடியேல்ல என்கிறதை விட, எங்கட மோசமான பொருளாதாரப் பிரச்சினை காரணமாமோ அல்லது எங்கட வேறேதாவது குறைபாடோ அவங்களை விட நாங்கள் முதலாளிமாருக்குக் கூட அடிச்சுக் குடுக்கிறம். 'மலிஞ்ச கூலி - பொலிஞ்ச கூலி' எண்டு முதலாளிமார் எங்கள வைச்சுக் கொண்டு அவங்கள வெளியால தள்ளுறாங்கள். போதாததுக்கு சரிவரப் பாஷை தெரியாதது எங்கட இன்னொரு Plus Point - இந்த வேலையளுக்கு.

நான் மௌனமானேன்.

"அதுக்காக அவங்கட அடாவடித்தனங்களை நியாயம் எண்டு மட்டும் நான் சொல்ல வரேல்ல. இந்தப் பக்கத்தையும் கொஞ்சம் பார்க்கலாம் எண்டு தான் சொல்லுறன்."

வழமை போல் வைகுந்தன் குழப்பி விட மண்டையைப் பினைந்து கொண்டு நின்ற எனக்கு இரண்டு மெற்றோக்கள் என்னைக் கடந்தது தெரியவேயில்லை.

மீண்டும் காத்திருந்தேன். அடுத்த வரவுக்காக...

வைகுந்தனுடன் சில நிமிடங்கள்

- சசி. யசோதரன்





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



- கறுத்தான்

இளையராஜாவின் Nothing But Wind இசையை கேட்டிருக்கின்றீர்களா?
தமிழ்ச்சூழலில் சாதனை மிக்க முயற்சி. அற்புதமான அனுபவம்.
அந்த ஒலி நாடாவின் இசைக்கோர்ப்பானது, மனிதனுக்கும் இயற்கைக் கும் இடையேயான உறவின் முரணை, இயற்கையை வெற்றிகொள்ளும் மனிதமுயற்சிகளின் எதிர்விளைவை விபரித்துச் செல்கிறது.
இயற்கை மூர்க்கம் கொள்கின்றது. நர்த்தனம் புரிகின்றது.
எள்ளி நகையாடுகின்றது.
சூறாவளியாய் சுழன்றடித்து எரிமலையாய் குமுறி வெடிக்கின்றது.
அலைகள் ஆர்ப்பரிக்கும் கடலாய் கொந்தளிக்கின்றது.
மனிதன் கைகட்டி, வாய்பொத்தி, செயலிழந்து வீழும் பரிதவிப்பில் ஓலம்தான் மிஞ்சுகின்றது.
மனிதனின் முதல் இசைக்கருவியான அந்த ஒற்றைப் புல்லாங்குழலின் சப்தமும் கரைந்து...., தேய்ந்து...,
காற்றைத்தவிர வேறெதுவுமில்லையென்றாகி....
இயற்கையின் சீற்றத்தின் சாட்சியமாய் இதோ நம்முன் "பங்களாதேஷ்".
இந்திய உபகண்டத்தின் கிழக்கு கரையோரமாய், வங்காளவிரிகுடா வின் வழியே இந்துமாகடலுக்கு முகம் காட்டி நிற்கும் சின்னஞ்சிறுதே சம்.
பழமைமிக்க பாரததேசத்தின் புண்ணிய நதியான கங்கையும், இன்னு மொரு பெரிய நதியான பிரமபுத்திராவும், இணைந்து ஒரே நதியாகி இந்துமா கடலில் கலக்கும் கழிமுகம்.
நெல்லும் சணலும் விளையும் செழிப்பு மிக்க வண்டல் மண் பிரதேசம்.
ஒவ்வோரு பருவமழையின் போதும். இவ்வாறுகள் கரையுடைத்துப் பாய்வதும், தேசம் வெள்ளத்துள் ஆழ்வதுமாய்.
தண்ணீர் அந்தத்தேசத்தின் இன்பமும் துன்பமுமாகி, வழமையாகி மேமாதத்தில் அங்கு நிகழ்ந்தது இதுவல்ல.
இந்துமா கடலில் மையம் கொண்ட காற்றழுத்த மண்டலமானது, நகர்ந்து, நகர்ந்து புயலுருப் பெற்றுச் சூறாவளியாகி மணிக்கு 240 கிலோ



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மீற்றர் வேகத்துடன் கரைகடந்து சென்றபோது, கடலும் கூடவே சென்றது.

ஒன்றேகால் லட்சம் மனிதஉயிர்களையும், நூறுலட்சம் பேரின் வதிவிடங்களையும், உடமைகளையும் சூறையாடிச் சென்றது புயல்.

துறைமுகப் பட்டணமாகிய சிட்டக்காங் நகரம் நீரினுள்மூழ்கி, மூச்சுத் திணறியது.

புயல்கடந்த பாதையெங்கும் உயிரினங்கள், மரம்செடிகள், வீழ்ந்துகிடந்தன. பிய்த்தெறியப்பட்டிருந்தன.

இயற்கை தன்சீற்றத்தின் இலக்காய் அந்த சின்னஞ்சிறு ஏழை நாட்டைத் தத்தெடுத்துவிட்டது போலும்.

சுதந்திரநாடெனத்தன்னை அறிவித்துக் கொண்டபோதே பங்களாதேசம், ஆசியாவின் முதன்மைப்பாத்திரம் வகிக்கும் வறியநாடாய் மாறிப் போயிருந்தது.

ஆனால் அதன் வரலாறும், மொழியும், தொன்மையும், செழுமையும் கொண்டவை.

இன்றும் சிறந்து மணம் பரப்புவது.

புகழ்பூத்த மனிதர்களான நோபல் பரிசு பெற்ற ரவீந்திரநாத்தாகூர், நாவலாசிரியர் சரத்சந்தர், சிந்தனையாளர் எம்.என்.ரோய், வெள்ளையனை எதிர்த்தெழுந்த நேதாஜி சுபாஸ் சந்திரபோஸ், இந்திய சுதந்திர போராட்டத்தின் போதான எண்ணற்ற வீரப்புதல்வர்கள்.

உலகம் தலைவணங்கும் திரைப்பட மேதை சத்தியஜித்ரே...

தாகூரும், சரத்சந்தரும் படிக்கப்பட்டதன் மூலம் இலங்கைத்தமிழர்களுக்கு வங்காளம் அறிமுகம்ன போதும்,

வங்கத்து இளவரசன் விஜயனும் அவனது தோழர்களும் இலங்கைக்கரையில் வந்திறங்கிய கதையானது, தமிழர்களின் மேல் விழுந்த ஒவ்வொரு அடிகளின் போதும், நினைவுகளில் நெருடியதை எப்படி மறைப்பது!

ஆனால் 1971ம் ஆண்டில் எழுந்த பங்களாதேஷ் உருவாக்கத்திற்கான போராட்டமானது, நெருக்கமாய், நேசமாய், இலங்கைத் தமிழர்களின் வாழ்வுடன் பிணைந்ததாய் மாறிப்போனது.

"வங்கம் தந்த பாடம்" "முஜிபுர் ரஹமான்", "முக்திபாஹினி".

20 வருடங்களின் முன்னால் அரசியல் மேடைகள் அனைத்திலும் முழங்கப்பட்ட சொற்கள்.

அன்றைய இளைஞர்களை, அரசியல் ஆர்வலர்களை மகுடிமுன் நாகமாய் ஆடவைத்த சொற்கள்.

தங்களைத் தாங்கள் "ஈழத்து முஜிபுர்" என உருவகித்து முடிசூடிக்கொண்ட அந்த அன்றைய அரசியல் வாதிகள்.

எல்லாம் இன்றைக்குப் போலவே... இரை மீட்டு அசைபோட கனவுக் கலவையாய், உருவற்ற நிழல்களாய்....

1970ம் ஆண்டிலும் வங்காளத்தை சூறாவளி தாக்கியது.

ஐந்து லட்சம் உயிர்களை அந்தச்சூறாவளி காவு கொண்டது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அந்தத்துயரத்துள்ளும் மையமிட்ட அரசியல் புயலில்தான் "பங்களாதேஷ் "பரிணமித்தது.
வரலாற்றில் வங்காளி மொழி பேசி, வங்காளமென இருந்த தேசம் கிழக்கு பங்காளம், மேற்கு பங்காளம் என மதங்களால் பிளவுண்டது.
இந்திய சுதந்திரத்தின் பின்னால் கிழக்கு வங்காளம் - கிழக்கு பாகிஸ் தான் என்றாக மேற்கு வங்காளம் இந்திய மாநிலமானது.
ஆயிரக்கணக்கான மைல்தூர வித்தியாசத்திலும் மதங்கள் இணைக்க பாகிஸ்தானின் - கிழக்குபாகிஸ்தானாய் - கிழக்குபங்காளம்.
மொழியா மதமா தேசியத்தை நிர்ணயிக்கும்?
மொழியென அறிவித்தது பங்காளதேஷ்.(கிழக்குவங்காளம்)
பாகிஸ்தானின் கட்டுக்குள் இருந்து விடுபட விரும்பிய வங்காளம் போராடத்தொடங்கியது.
1971ம் ஆண்டு மார்ச் தொடங்கி , டிசம்பர் வரையான அந்த ஒன்பது மாதங்கள். கரந்தடிப்படையான "முக்திபாஹினி" போராளிகளின் வீரம் செறிந்த பேராட்டம்.
பாகிஸ்தானின் சர்வாதிகாரியான யாகியாகானின் இராணுவத்தை எதிர்த்து முக்திபாஹினி போராளிகள் முன்னேறிக் கொண்டிருந்தனர்.
முப்பது லட்சத்துக்கும் அதிகமான மக்கள் கொல்லப்பட்டனர்.
தொகையைக் கவனித்துக் கொள்ளுங்கள்!
நூறுலட்சம் மக்கள் இந்தியாவுக்குள், தங்கள் மொழி பேசும் பகுதியான மேற்கு வங்காளத்துக்குள் அகதிகளாகச் சென்றனர்.
இந்தியாவின் மனிதாபிமானப் பண்பானது இனியும் சகிக்கமுடியாது என்ற நிலையில் தனது எல்லையைத் தாண்டி கிழக்குபாகிஸ்தானுக்குள் - பங்களாதேஷ் நுழைந்தது.
அன்னை இந்திரா "இரும்பு மனுஷி" இந்திராவானார்.
1971 டிசம்பர் 22ல் "பங்களாதேஷ்" எஎன்னும் சுதந்திர தேசம் பிரகட னம் செய்யப்பட்டது.
சுதந்திர தேசம் என்ற ஒன்று வந்து சேர்ந்தது ஆனால்...
அந்த தேசபக்தர்கள் என்ன வானார்கள்?
எங்கே அந்த தேசபக்த "முக்திபாஹினி" இளைஞர்கள்?
எந்தப் புயல் அவர்களைக் கொண்டு சென்றது?
வங்கம் தந்த பாடமிது!

சணலை உற்பத்தி செய்து உலகின் தேவையை 75% ஈடுசெய்து அந்நிய செலாவணியைத் தேடிக்கொண்ட பங்களாதேஷ் சிந்தெட்டிக்(SYNTHE-TICS) என்னும் செயற்கை இழைநார் சணலுக்கு மாற்றீடாக அறிமுகம் செய்யப்பட்டதனால் தன் பொருளாதாரத்தை முழுமையாய் இழந்து போனது.
குறுகிய நிலப்பரப்பில், குடிசன நிரம்பல் மிக்க பங்களாதேசம்- 72ம் ஆண்டின் குடிசனக்கணக்கெடுப்பின்படி 80 மில்லியன் மக்கள்- இயற்கையின் சீற்றத்தில் இருந்து தற்காத்துக் கொள்வதும், அரசியல்

www.tamilarangam.net

நெருக்குவாரத்திலிருந்து மீண்டெழுவதும், அத்தேசத்தின் கரங்களை மட்டும்
சார்ந்ததல்ல.
பங்களாதேஷ் "உலகின் துயரம்" என குறிக்கப்பட்டாயிற்று. புயலின் துயரத்திலிருந்து மீளுமுன் இது என்ன? எரிமலையின் குமுறல்கள் அச்சுறுத்துகின்றன. முதலில் யப்பானில் உள்ள உன்சன் எரிமலை (MOUNT UNZEN)குமுறி வெடித்தது.

ஆறு ஆண்டுகளுக்கு முன் நெருப்பை உமிழ்ந்து உறங்கிக் கிடந்து இப்போது மீண்டும்.

சங்கிலித்தொடராய் எரிமலைகள் குமுறுமோவென ஐயுறும் வண்ணம் பிலிப்பைன்சின் பிநைபோ(MOUNT PINATUBO) எரிமலையும் குமுறுகின்றது. இன்னமும் குமுறல்கள் தணியவில்லைவிஞ்ஞானிகள் எச்சரித்த வண்ணமே உள்ளனர்.

கோபங்களை, ஏமாற்றங்களை, அவமானங்களை தாங்கித்தரித்து, உள்ளுக்குள் தேக்கி- அமுக்கத்தில் திணறி - பொறுமையை இழக்கும் மனிதனை, மனித கூட்டத்தை பார்த்திருக்கின்றீர்களா?

எரிமலையும் அப்படித்தான்

கற்களாய், மண்களாய், அசைவற்ற சடப்பொருளாய்...... இதுவா நம் புவிக் கோள். இல்லை....இல்லவே இல்லை.

நெருப்பாய் கனன்று நீறுபூத்துறைந்த புவியோட்டின் கீழே அதன் மையப்பகுதி இன்னமும் உறையா நெருப்பாய், அசைவியக்கம் கொண்டதாய், கொதி நிலையில் கொளகொளக்கும் அக்கினி குழம்பெனத் தகிக்கும். விசைகளின் முரண்களில் சமநிலை குலைகையில் அது வெம்பி, வெம்பி வெகுண்டெழுந்து, புவியோட்டின் மென்மைப் பகுதிகளை வாய்களாக்கி, தன்னைப் போர்த்திருக்கும் நீறினை கக்கி விசிறி பிரமாண்டம் கொள்ளும்.வானுயர நிமிர்ந்து குடைக்காளான் போல் விரிந்து சுற்றமெங்கும் படியும்.

குமுறிக் கொப்பளித்த அக்கினிக் குழம்பு வழிந்தோடும். சாம்பலும் கந்தகப் படிவும் தான் மிஞ்சும்.

உலகின் உயிர்ப்புள்ள அறுநூறு எரிமலைகளில் குறைந்தது ஐம்பதாயினும் குமுறிக்கொண்டே இருக்கின்றன.

கடந்த ஆண்டு அமெரிக்காவிலுள்ள நெவாடா டெல் ரூஷ் (NEVADA DEL REUZ), மெக்சிக்கோவிலுள்ள எல் சிசோன் (EL CHICON) ஆகிய எரிமலைகள் குமுறி வெடித்ததில் 25,000 மக்கள் கொல்லப்பட்டதாய் கணக்கிடுகின்றனர்.

உலகின் குடித்தொகையில் பத்து வீதமான மக்கள் - அதாவது 360 மில்லியன் மக்கள் இயற்கையின் சீற்றம் எவ்வேளையிலும் வெடித்துச் சிதறும் எரிமலைகளின் சுற்றாடலில் வாழ்கின்றனர். பசுபிக் மாகடலின் விளிம்பையொட்டி, ஆசிய, வட, தென்அமெரிக்க கரையோரத்திலேயே அதிக எரிமலைகள். விஞ்ஞானிகள் இதனை "எரிவளையம்"(RING OF FIRE) என்கின்றனர்.


www.tamilarangam.net

நாம் எப்போதாவது இயற்கையின் சீற்றத்தை எதிர்கொண்டுள்ளோமா? திருகோணமலையிலுள்ள கன்னியா வெந்நீருற்றுக்களும் புவியோட்டின் மென்மையான பகுதியின் அடையாளம் தான்.
எப்போதும் என்னவும் நடக்கலாம்.
1978 ஐப்பின்னோக்கிப் பாருங்கள்.
ஓங்கிவளர்ந்திருந்த தென்னை மரங்களை குறுக்கிமுறித்தும், கூரைகளைப் பிய்த்தெறிந்து முறியாத மரங்களின் உச்சிகளில் ஏற்றிவைத்தும், இலங்கையின் நெற்களஞ்சியமான கிழக்கு மாகாணத்தைச் சூறையாடிய அந்தப் புயல்.
நினைவுகளில் நெருடவில்லை...!
காற்றும் மழையுமாய் சிதறடித்த மட்டக்களப்பை ஓடோடிச் சென்று கையணைத்த இளைஞர் கூட்டம்.
மனங்களால் பிளவுண்டிருந்த வடக்கும் கிழக்கும் இணைந்ததான அந்த அழகுக் கோலம்.
அரசியல் தேனீக்களாய் பூக்கள் தோறும் பறந்தமர்ந்து, மகரந்த பொடிகாவி.
கருக் கொண்ட கனவுகள், உருப்பெற்ற இயக்கங்கள், கருத்துக்கள் சிதறடிக்க, காலம் உருக்குலைக்க புயல் எங்கே முடிந்தது....
படகுகளில் ஏறி கடல்கடக்க நேர்கையில்,
இராமேஸ்வர வெளிச்சத்தின் முன்னால் அழிஞ்ச கரை தெரியும். புயலின் சீற்றத்தின், கடலின் கொந்தளிப்பின் சாட்சியமாய் தனுஷ்கோடி. இராமேஸ்வரம் தீவின் வாலாய் நீண்டுகொண்டிருக்கும்கரை அணிலும் மண்சுமந்து இலங்கைக்கு பாலம் எழுப்பிய "இராமர் அணை" இங்கிருந்து தொடங்கும்.
இயற்கையின் சீற்றம் பற்றி இலக்கியங்கள் எம்மிடம் இல்லை.அங்கொன்று இங்கொன்றாய் குறிப்புகளும் கதைகளும்தான்.
முதல் சங்கநூல்களும், சங்கம் அமைந்த நகரமும் கடல்கொண்டு போயிற்றென்றும்,

ஈழத்துணவு வந்திறங்கிய காவிரிப்பூம்பட்டினம் கடலினுள் முழ்கிவிட்டதென்றும் - பாடல் வரிகள் உண்டு.
தமிழர்தம் மூதாதையரின், நிலமும் நாகரீகமும், கடல்கோளினால் அழியுண்டு போனதென்ற வரலாறும்,
அவர்களின் நிலம் "லெமூரியா" அல்லது "குமரிக்"கண்டமென்றும் கூறும் கூற்றுகளுக்கு சான்றுகள் குறைவேயாயினும் இவை வெறும் கட்டுக்கதைகளுமல்ல.
RIDDLES OF THE THREE OCEAN- சோவியத் ஆய்வாளர்கள் இருவர் எழுதி முன்னேற்றப்பதிகம் வெளியிட்ட நூல்.
"மாகடல் மர்மங்கள்" எனத் தமிழிலும் உண்டு.
இந்து மாகடலில் முழ்கியுள்ள கண்டம் பற்றியும், மனிதனின் கருமையம் அதுவாய் இருக்கக்கூடுமெனவும் நூல் கூறுகின்றது.

www.tamilarangam.net

மனிதனின் கருமையம் என்றதும், இருண்ட கண்டம் ஆபிரிக்காவும் கறுப்பர்களுமே மனத்திரையில் ஆடுகின்றார்கள்.
கருமையம் பற்றிப்பிறிதொரு கால் பேசலாம்.
நன்றாகக் கவனித்துப் பாருங்கள்!
முன்னெப்போதையும் விட, நம் புவிக்கோள் பற்றிய பேச்சு உரத்து ஒலிக்கின்றது.
மனிதவிஞ்ஞான வளர்ச்சியானது - அதன் பக்க விளைவாய் - இயற்கையை - விசைகளின் சமநிலையை - சுற்றுப்புறச்சூழலை பாதிப்புறச் செய்துள்ளதாகவும், புவிக்கோளின்ன உயிரின நலன்களைப் பாதுகாப்பதில் பெரும் பங்கு வகிக்கும் ஓசோன் படலத்தில் துவாரம் விழுந்து பலவீனமுற்று உள்ளதாயும் விஞ்ஞானிகள் எச்சரித்தவண்ணம் உள்ளனர்.
அண்மைக்கால இயற்கை நிகழ்வுகள் மனித ஆற்றலுக்குச் சவால் விடும் வகையில் அமைந்துள்ளன.
மனிதனின் வாழ்வியல் போராட்டத்துடன் இயற்கையின் சீற்றத்தை எதிர்த்து நிற்கும் போராட்டமும் தான் மனித நாகரீகத்தின் வரலாறோ?



www.tamilarangam.net

நவீன சோவியத் எழுத்தாளர் வரிசையில்-

## வலெந்தின் ரஷ்புதீன் - ஒரு அறிமுகம்

கங்கா புஷ்பாகரன் மேனன்

பொதுவாக கலை, இலக்கியத் துறைகளில் பௌதீகவியலாளன்", கவிஞன்",பொறியியலாளன்"அல்லது நடிகன்" என்பவற்றுக்கு சரியான வரைவிலக்கணம் கொடுக்கப்படவில்லை.

வலெந்தின் ரஷ்புதீனைப் பொறுத்தவரையில் இது முற்றிலும் உண் மையே. பெரும்பான்மையான சோவியத் மக்கள் அவரை "யதார்த்த வாதி" எனவே அடையாளம் கண்டுள்ளனர்.

அந்த எழுத்துக்கள் வர்த்தக நோக்கின் அடிப்படையில் எழுதப்பட்ட வையல்ல; மனித ஆளுமை, சமூகம், ஆற்றாடல் மற்றும் நடைமுறை பிரச்சனைகள் என்பவைகளோடு எவ்வித திரிபுகளுமின்றி தொடர்புப் பட்டவைகளாகும்.

மனிதனை, நல்ல வாசகன்', நண்பன்' நெருங்கிய சகா' என்கிற அந்தஸ் துகளுக்கு உயர்த்துவதற்குரிய அமரத்துவ வலிமை அவரின் எழுத்துக ளுக்கு என்றுமே உண்டு.

சைபீரியாவிலுள்ள குக்கிராமம் ஒன்றில் பிறந்த ரஷ்புதீன், ஆசிரியரா வதற்குரிய இலட்சியம் கொண்டவராய் இருந்தார். இதன் பொருட்டு இர்க்குஸ் பல்கலைக்கழகத்தில் வரலாற்று- மொழியியல் துறையில் பயின்றார். இளமைக் காலத்தில் பத்திரிகை மற்றும் சஞ்சிகைகளில் கட்டுரைகள் எழுதுவதன் மூலம் கிடைத்த வருமானத்தைக் கொண்டே வாழ்வை நடாத்தி வந்தார்.

அவரின் முதல் சிறுகதை 1961ல் அங்காரா என்கிற பத்திரிகையில் வெளியானது. இக்கதை ரஷ்புதீனின் இலக்கிய ஞானாசிரியரான விளாதீமிர்ச்சிவிலீகினை மிகவும் கவர்ந்தது.

1967ல் அவரின் "பாதாளத்திலிருந்து ஓர் மனிதன்" எனும் சிறுகதை தொகுதி வெளியானது. பத்தாண்டு இடைவெளியின் பின் வெளியான புத்தக வரிசையில் 'மரியாவுக்குப் பணம்', 'கடன் வாங்கப்பட்ட காலம்', 'மாத்ரோயாவுக்கு பிரியாவிடை' போன்ற நாவல்கள் மிகவுமே குறிப் பிடத்தக்கவைகளாகும். மேலும் அவரின் படைப்புக்களில் பிராந்தியப் பற்று(மண்வாசனை) அதிகமாக மிளிர்வதைக் காணலாம்."சைபீரிய சேக்கோவ்" என வர்ணிக்கப்படும் ரஷ்புதீன் புகழ்பெற்ற நாவலாசிரியர்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

களான தல்ஸ்டோய், சோலஹவ், பல்க்னர் ஆகியோர்களுக்கு சமமாக மதிக்கப்படுகிறார்.

பெரும்பாலான அவரின் ஆக்கங்களில் நாட்டுப் புறத்தைச் சார்ந்த சாதாரண மக்களே கதா பாத்திரங்களாக உருவகிக்கப்படுகிறார்கள்.

ரஷ்புதீனின் படைப்புக்களானது, வாழ்வுக்கும் மரணத்துக்கும் இடையில் அமரத்துவமான ஓர் பங்களிப்பினை மானுடவாழ்வின்பால் உருவாக்குகின்றன. நினைவுக்கெட்டாத எவ்வித கற்பனா சிருஷ்டிப்புக் களைம்உருவாக்க அவர் முயலவில்லை- என யூகோஸ்லாவிய இலக்கிய விமர்சகரான லிலியானா சொப் கூறுகிறார். கனடிய கல்விமானான நோர்மன் ஷ்னெய்ட்மென், ரஷ்புதீனின் வெளியீடுகள் புவியியல், தேசிய மற்றும் வகுப்புவாதங்களுக்கு அப்பாற்பட்டவைகளாகும் எனக் குறிப்பிடுகிறார்.

வலெந்தின் ரஷ்புதீன் தன்னை, மனோதத்துவ எழுத்தாளன் எனப் பிரகடனப்படுத்துவதன் காரணம் , அவரின் படைப்புக்கள் ஏதோ ஓர் விதத்தில் வாசகனின் ஆன்மீக உலகத்தை (பண்படுத்தப்பட்ட நெறி வாழ்க்கை) தொடுவதே. அவரின் பாத்திர வார்ப்புக்கள் யாவுமே அனைவராலும் அடையாளம் காணப்படுகின்றனவா என்பது தர்க்கத் துக்குரியதே.

'மாத்ரோயாவுக்கு பிரியாவிடை' எனும் நாவலில் வெள்ளத்தினால் மூழ்கடிக்கப்பட்ட கிராம வாழ்மக்களின் சோக வரலாறு வெளிப்படுத் தப்படுகிறது. "நாங்கள் யார்? இப்பூமியை தற்காலிக குத்தகைக்கு எடுத்துக் கொண்டவர்கள். சொற்ப கணங்களே நாங்கள் இங்கு தங்கமுடியும். இறந்த காலத்தைக் குறித்து விளக்கமின்மைகளையும் எதிர்காலத்தைக் குறித்து நிச்சயமற்ற தன் மைகளைக் கொண்டதாகவுமே எமது வாழ்வு நகர்கிறது" என்ற தத்துவம் ஆசிரியரால் நாவலில் சுட்டிக் காட்டப்படுகிறது.

'கடன் வாங்கப்பட்ட காலம்' என்பது வயது மூதாட்டியைப் பற்றியதா கும். தனது வாழ்வை ஓர் விவசாயியாகவே கழித்த அக் கிழவியின் வினாவெல்லாம் தனது மரணத்தின் பின்னர் தனது செல்லப்பிராணி களை பராமரிக்கப் போகிறவர்கள் யார் என்பதே. இதற்காக சொத்துக் கள் அனைத்தையும் விட்டுச் செல்கிறாள். மரணத் தருவாயிலிருக்கும் கிழவியின் விருப்பங்களையும் அபிலாஷைகளையும் ஆசிரியர் உணர்ச்சி வசமாக காட்டுகிறார்.

'மரியாவுக்குப் பணம்' நாவலில்(குறு) வாசகனை;நல்லது- கெட்டது, அனுதாபம்-பரஸ்பர உதவி, மனச்சாட்சி-கருணை என்கிற மனித நேயங்களுடன் சந்திக்க வைக்கிறார்.

'தீ' என்கிற படைப்பு 85-ல் வெளியானது. 'தீ'யின் பொது மனித மனோபாவங்கள் எவ்வாறு இருக்கின்றன என்பதை படம் பிடித்துக் காட்டுகிறார். ஆசிரியர் இந்நாவலில் வாசகனுக்கு இரண்டு கருத்துக் களை விநயமாக எடுத்துச் சொல்கிறார், அவைகள்- 'வீடும் நாடும்'



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

எந்தவொரு புகழ்பெற்ற எழுத்தாளனும் அனுபவிக்காத கடினங்களை அவர் அனுபவிக்க வேண்டியிருந்தது. ரஷ்புதீனின் சுதந்திரம் தொடர் பான உணர்வுகள் அவரின் எழுத்துக்களில் என்றுமே பரிணமிக்கத் தவறியதில்லை. தனது சொந்த எண்ணக்கருத்துக்களை தனது பாணி யில் தனக்கென்ற மொழி நடையில் சுலபமாக வெளிக்கொணர்வதில் அவர் கண்ட வெற்றி அளப் பரியது. வரிக்கு வரி நேர்மை நாணயம் போன்ற மானுஷ்ய குணாதிசயங்களை அவரின் படைப்புக்களில் இலகுவாக இனங் கண்டு கொள்ளலாம்.

1988-89 களில் ஐக்கிய நாடுகள் அமையகத்தினால் (யூ.என்.ஈ.பீ) 59 நாடுகளிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட விஞ்ஞானிகள், எழுத்தாளர்கள் மற்றும் சமூக முக்கியஸ்தர்களின் வரிசையில் வலெந்தின் ரஷ்புதீனும் இடம் பெறுகிறார்.

உன்னதமற்ற மனோபாவங்களுக்கும் சமூக அரசியல் கொள்கைகளுக் கும் ஏற்ப ஏற்படுகின்ற மாற்றங்களுக்கு ரஷ்ய- -

சோவியத் எழுத்தாளர்கள் நிலையாக முகங்கொடுக்கவேண்டிய கட்டாயத்தில் இருந்தனர். ஆனால் இன்று இவ் அதிகார வர்க்க மனப்பான்மைகள் ரஷ்புதீன் போன்றோரால் தகர்த்தெறியப்பட்டுள் ளன.


ரஷ்புதீன் மனச்சாட்சியுடன் ஒன்றி எழுதுவதனாலென்னவோ அவரின் எழுத்துக்களில் வெளிப்படுகின்ற,'உண்மை','நீதி' போன்ற கோட்பாடு களை பராதீனம் செய்ய முடியாமலிருக்கிறது. ஆகவே அவர் 'மக்கள் எழுத்தாளன்' என ஏற்றுக்கொள்ளப்பட்டதில் தவறு ஒன்றுமில்லை.

---

OLLIVER STONE னின்

**THE DOORS**

மூளைப் பொறியின்
கதவுகள்
திறந்து அடிபடும்
ஓசை
கேட்டுக் கொண்டே
இருக்கிறது



பரிஸில் சமாதியான
அமெரிக்க இளங்கவி
ஞன் ஜிம் மொறிசனின்
வாழ்க்கை வரலாற்றுப்
படம் பற்றி...

ஜ.ஷ.

அடுத்த இதழில்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# எதிர்பார்ப்பு

- சு. கருணாநிதி

## சிறுகதை

"காலையும் கையையும் கொண்டுபோன செல் இந்த உயிரையும் ஏன்தான் கொண்டு போகாமல் விட்டுதோ?"

தன்னாலே மற்றவர்கள் சிரமப்படுகையில் பூபாலன் நச்சரிக்கும் வார்த்தைகள்.

கமலா சாரத்தை தலையாலே போட்டு தன் சாரத்தை தானே கட்டுகின்ற கைவழத்திற்கு கணவனுக்குப் பின் நின்று இறுக்கமாகக் கட்டிவிட்டாள்.

சாரத்தை சாதாரணமாகக் கட்டுவது போலல்லாமல் கொழும்பில் நாட்டாமைமார் கட்டுவது போல் சாரத்தை சுற்றி இரண்டு பக்கத்தையும் சேர்த்து இரண்டு மடிப்பு மடித்துவிட்டால் நாள் முழுக்க அசையாமல் இருக்கும். இந்த 'மெதட்' ஐ ஏற்கனவே பூபாலன் மனைவிக்கு பழக்கியிருந்ததால் அவளுக்கு சாரத்தை உடுத்திவிடுகிற சிரமம் குறைவு.

அந்தமுதிர் காலைப்பொழுது வெகு பிரகாசமாகவேயிருந்தது. சூரியன் தன் கரங்களை விரித்து பூமியை அணைத்து சல்லாபித்துக் கொண்டிருந்தான்.

அரச இராணுவத்திற்கும் விடுதலைப் போராளிகளுக்கும் இடையே நடந்துகொண்டிருந்த யுத்தம் கடந்த ஒரு வாரமாக நிறுத்தப்பட்டிருக்கின்றது. மக்கள் மனக்களங்களில் சின்ன அமைதி. இந்த அமைதி தற்காலிகமானதெனினும் அதுவும் மக்களுக்குப்பெரிய ஆறுதல் தான்.

நாளையோ, நாளை மறுநாளோ ஆகாய தரைமார்க்கமாக தாக்குதல்களை மேற்கொள்ளலாம். இந்த இடைவேளையில் இராணுவம் ஆயுதங்களையும் ஏனைய அத்தியாவசியப் பொருட்களையும் சேர்த்துவிட்டு அடுத்த தாக்குதலுக்கு தயாராவது போல, ஆறாத புண்களுக்கும், இனிக்கீறப்போகும் காயங்களுக்கும் மருந்துகளைத் தேடிப்பிடிக்கவும், உணவுப் பொருட்களை கொணரவும் மக்களுக்கும் இதுதான் சந்தர்ப்பம்.

அடைமழை பெய்து ஓய்ந்த பின் சிறுவர்களுக்கு இருக்கின்ற குதூகலத்தைப் போலமக்களுக்கு அந்தச் சாவிற்கான போராட்டத்திலும்கூட குதூகலம். அந்தக் கிராமமெங்கும் ஒரே சுறுசுறுப்பு. மக்களனைவரும் அங்கலாய்ப்போடும், பரபரப்போடும் அவசரப்பட்டுக் கொண்டிருந்தனர்.

அங்கே அரிசி விற்கிறார்கள்.... இங்கே மண்ணெண்ணை கொடுக்கிறார்கள்.... கடையில மா வந்திருக்காம்.... என்று கேள்விப்பட்டும், கண்டும் புற்றீசல்கள் போல மக்கள் பல திசைகளிலும் பறந்து திரிந்தனர். ஆண் உதவியுள்ளவர்கள் தொலை தூரங்கட்கு சென்று சைக்கிளிலோ நடந்தோ உணவுப் பொருட்களைக் கொண்டு வந்து சேர்த்துக் கொண்டிருந்தனர். இங்கே அந்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

த் தேடலும் கமலாவினுடைய தாகையால் காலையிலிருந்து இயந்திரமாக இயங்கிக் கொண்டிருந்தாள்.

றொட்டி சுட்டுக் கொடுத்துப் பிள்ளைகளைப் பள்ளிக் கூடத்திற்கு அனுப்பிவிட்டு, வீட்டைக் கூட்டிப் பெருக்கி ஆட்டுக் கிடாய்களை இடம்மாற்றிக் கட்டி குழை வெட்டிப் போட்டு கணவனை குளிப்பாட்டி அவன் தேவைகளையெல்லாம் அவனருகில் தயார் செய்து வைத்துவிட்டு நாகம்மா வீட்டிற்குப் போகப் புறப்படலானாள்.

பள்ளிக்கூடத்திற்குப் போன பிள்ளைகள் ஆசிரியர்கள் வராததனால் திரும்பி வந்து கொண்டிருந்தனர்.

"அம்மா இண்டைக்கு டீச்சர்மார் ஒருத்தரும் வரயில்ல எல்லாப் பிள்ளையளும் திரும்பிப் போகுதுகள் நாங்களும் வந்திட்டடம்"

தர்ஷியும், தர்சனும் ஒரே தொனியில் 'கோரஸ்' பாடினர்.

"சரி அப்பாவோட இருங்கோ நான் பாட்டி வீட்ட போட்டு வாறன்."

கமலா நாகம்மா வீட்டிற்குப் போனாள்.

பூபாலனுக்கு ஒரு வருடத்திற்கு முன் எங்கிருந்தோ வந்த செல் ஒரு காலையும் கையையும் வாங்கிக் கொண்டு போனது.

ஆரோக்கியமான மனிதர்களே படுகின்ற அவஸ்தைகளுக்கு அங்கவீனர்கள் படுகின்ற அவஸ்தைகள் சொல்லில் அடங்குமோ?

இப்போது மனைவி பிள்ளைகளுக்கு மட்டுமல்ல, இனஅழிப்பு நடவடிக்கை மேற்கொள்ளும் வேளையில் இடம் பெயர்ந்து செல்லும்போது பூபாலனை வண்டியில் வைத்துத் தள்ளுவதற்கும், தூக்கிக் கொண்டு செல்ல உதவுவோர்க்கும், சுருக்கமாகச் சொன்னால் இரக்கமுள்ளவர்கள் அனைவர்க்குமே இறக்கி வைக்கமுடியாத பாரமாக பூபாலன் இருந்தான்.

பூபாலனின் சகோதரர்கள் மேற்கு நாடுகளில் அகதிகளாக வாழ்ந்தாலும் ஓரளவு வசதியாக வாழ்கின்றனர். கடல் தாண்டி வந்ததும், உடன் பிறப்புகளுக்குக் கூட பூபாலன் யாரோ ஆனான். பாரிஸில் உள்ள சகோதரன் ஒருவன் பூபாலனின் கால் கை இழந்த போட்டோவை அனுப்பி அதைச் சாட்சியாக்கித் தான் அகதிக்காட் பெற்றுக் கொண்டான்.

"...அண்ணனால்தான் எனக்குக் காட் கிடைத்தது. நான் இருக்கும் வரை உங்களைக் கைவிடமாட்டேன். பொய்க்கால் செய்து பொருத்தவும். பணம் அனுப்புகிறேன். அண்ணி ஒன்றுக்கும் யோசித்து கவலைப்படவேண்டாம்....."

உருக்கமாகவே கடிதம் எழுதியிருந்தான். பூபாலனுக்கும் இழந்து போன காலும் கையும் மீண்டும் வந்தது போல இருந்தது. மகிழ்வுற்றிருந்தான்.

கைநழுவிப் போன உறவு கை காலிழப்போடு சேர்ந்து கொண்டதால் அவன் தன் உயர்வுக்கு உதவியதற்காகவேனும் பிரதியுப

www.tamilarangam.net

காரம் செய்வான் என்ற எதிர் பார்ப்போடு கமலாவும் நம்பிக் கையோடிருந்தாள்.

அந்த உருக்கமான கடிதத்தின் பின் கடிதங்கள் எதையும் காண வில்லை. பணநெருக்கடி வேளைகளில் தம்பியை நினைத்து ஏங்குவான்.எப்படியும் பணம் அனுப்புவான் என்ற நம்பிக்கை யோடு அவன் போடும் கடிதங் களுக்குப் பதில் கிடைப்பதில்லை.

கமலா நாகம்மாவீட்டில் வீட்டு வேலை செய்து கிடைக்கும் ஊதி யத்திலே அரை வயிற்றுக் கஞ்சி யும் கூழுமாக ஊற்றிக் காலத் தைக் கழித்து வந்தனர்.

நாகம்மாக் கிவியும் கிழவனும் தலை நரைத்து மூப்படைந்து முப் பொழுதும் துயில்விரும்பும் சுடு காடு அழைப்பு விடுக்கின்ற வய தினர். அவர்கள் பிள்ளைகள் அனைவரும் மேலைநாடுகளுக் குத் தப்பி ஓடி விட்டனர். தாய் தந்தையரை தம்மோடு அழைக்க முயன்று அவர்கள் ஆரோக்கியமற் றவர்களாதலால் தூதரகங்கள் விசா கொடுக்க மறுத்துவிட்டன.

இதன்பின்புதான் கிழவன் கிழவி யினது பாதுகாப்பு,பந்தோபஸ்து, பராமரிப்புப் பணிகள் கமலாவி டம் ஒப்படைக்கப்பட்டன. கம லாவும் முடிந்தவரை விசுவாசத் தோடு குறையின்றி பராமரித்து வந்தாள். ஆனால் கிழவியோ கூலி விடயத்தில் மிகவும் கறாரா கவே இருந்தாள்.

கமலா நாகம்மா வீட்டு வேலை களைச் செவ்வனே முடித்துவிட்டு வந்து கொண்டிருக்கையில்..

"சங்கக்கடையில அரிசி வந்திருக்கு போய் வாங்கடி தங்கச்சி.....- ரெண்டு கிலோ தான் குடுக்கி னம்."

கமலாவை வழியில் கண்ட யோவதி மென்மையாக இரகசிய மான தொனியிற் சொன்னாள்.

"என்ன விலையக்கா?"

"நாற்பத்தைஞ்சு ரூபா"

"சனமாயிருக்கோ"

"ஓமடியம்மா சனமாத்தானிருக்கு கெதியாய்ப் போய் வாங்கு....மு டிஞ்சாலும் முடிஞ்சிடும்..."

'வீட்டில ஒரு பருக்கை அரிசியில் ல...ஒரு சல்லிக்காசும் இல்லை... இந்தச் சந்தர்ப்பத்தை விட்டால் பேந்து எங்க அலையிறது...'

நாகம்மா வீட்டுப் படலைக்கு வெளியே நின்று பதட்டப்பட் டாள்.

மனதை அமைதிப்படுத்திக் கொண்டு படலையைத் திறந்து உள்ளே போனாள். கமலாவின் நடையில் அவசரத்தைக் கண்ட கிழவி"என்னடி தங்கச்சி...ஆமி...- கீமி இறங்கிட்டாங்களோ "

கமலா விஷயத்தை விபரித்தாள்.

"ஐயோ இந்த நேரமாப் பாத்து கையில ஒரு சதமும் இல்லாமப் போச்சே....பொடியளும் காசு அனுப்பி கனகாலமாச்சு"

கிழவியின் கஞ்சத்தனத்தை நன்கு தெரிந்திருந்தும்' இனி யாரிடம் போய்க் கேட்பது, யார் தருவார் கள். நம்ம பஞ்சம், பசியை தெரிஞ்ச கிழவி தானே' என்று ஆற்றாமையால் தான் கேட்டாள். கிழவி கைவிரிக்க ஏமாற்றத்துடன் திரும்பினாள்

www.tamilarangam.net

"மாமா....அத்தை இல்லையா..? என்று கேட்டுக் கொண்டு ஓடிவந்தாள் எதிர் வீட்டுப் பூமணியின் மகள்.

ஏன்...என்னத்துக்கு...?

"கடையில அரிசி குடுக்கினமாம்.... எங்கட அம்மா வாங்கப் போட்டா அதுதான் உங்களுக்கும் சொல்லச் சொன்னவோ"

பூபாலன் குடும்பத்தில் அயலவர்கள் வைத்திருக்கும் தனிமதிப்பும் இரக்கமும் இப்படியான அவசியமான சந்தர்ப்பங்களில் கைகொடுத்து வருவது அவர்களுக்குப் பேருதவி.

கமலா கடைக்குப் போய்க் கொண்டிருந்தாள்.

வழியில் பியோன் தர்மலிங்கம்!

மறித்துக் கடிதம் கேட்போமா? என்று நினைத்தவள், பிந்திப் போனால் அரிசிமுடிந்துவிடும் என்ற பதட்டத்துடன் தர்மலிங்கத்தைக் கவனிக்காமலே ஓடினாள்.

ஆனால் தர்மலிங்கம் விடவில்லை.

வெளிநாட்டுக் கடிதங்களுக்கு - அதுவும் பூபாலன் போன்ற குடும்பங்கள் ஏங்கித்தவிக்கும் தவிப்பை பியோன் தர்மலிங்ம் நன்றாகவே உணர்ந்திருந்தார்.

"பிள்ள கமலா பிரான்சில இருந்து மச்சான்ர கடிதம்!"

ஏதோ தனக்கு வந்த கடிதம் போன்ற உற்சாகத்தில், தர்மலிங்கம் உரத்துக் கத்திய சத்தம், கமலாவை மட்டுமல்ல தெருவில் போய்க்கொண்டிருந்த அனைவரையுமே ஒரு கணம் சிலையாக்கியது.

கமலாவுக்கு கடன் கொடுத்தவர்கள் மனதிலும் சிறு நம்பிக்கை துளிர்விட மகிழ்ச்சி கொப்பளித்தது.

கமலா ஓடிவந்து கடிதத்தை வாங்க, பின்னே பூபாலனும் வந்துகொண்டிருந்தான் - உரபாக்குடனும் ,ஊன்றுகோலுடனும்.

கைகாலிழந்த அனுதாபம் சனத்துக்குள் நசிபடாதுசுகமாகவே அரிசி வாங்கிக் கொடுக்கும் என்ற நம்பிக்கை அவனுக்கு.

நீண்ட இடைவேளையின் பின் இன்று தம்பியின் கடிதம்! எல்லையற்ற மகிழ்ச்சி - ஊன்றுகோல் இல்லாமலே நிற்கலாம் போன்ற உணர்வு அவனுக்கு. அரிசியையும் மறந்தான். தன் பஞ்சத்தையும் மறந்தான்.

கடிதத்தை வாங்கி முத்தமிட்டுக் கொண்டான்.

'என்ன இருந்தாலும் தம்பி தம்பிதான். கனகாலத்துக்குப் பிறகு இண்டைக்கு எழுதியிருக்கிறான். காசு அனுப்பிற விஷயமாத்தான் இருக்கும். யாராவது ஆக்களிட்டையும் கொடுத்து விட்டிருப்பான்! காசு அனுப்பாமல் அண்ணைக்கு கடிதம் போடக்கூடாது என்று தான் இவ்வளவு நாளும் விட்டிருக்கிறான்'

மகிழ்ச்சி ஆரவாரத்தில் தன்பாட்டிலேயே புலம்பிக்கொண்டு ஆவலோடு கடிதத்தை உடைக்க மைத்துனியின் எழுத்துப் பளிச்சிட்டது.

"...எப்படி உங்களுக்கு எழுதுகிறதென்றே எனக்குத் தெரியவில்லை. இரண்டு கிழமையாய்

www.tamilarangam.net

இவடைிரக் கொண்டு போய்க் கொஸ்பிற்றல்ல விட்டிருக்கு. குடியால ஈரல்ல ஒரு பகுதி கரைஞ்சு போச்சு. எனக்கு என்ன செய்யிறதெண்டே தெரிய வில்லை. நானும் பிள்ளையளும் உங்கதான் வரப்போறம். எங்களையும் நீங்க தான்...."

கடிதத்தைத் தொடர்ந்து வாசிக்கமுடியாது பூபாலன் வேலியோரம் சாய, கீழே விழுந்த உரபாக்கைக் கையிலெடுத்துக் கொண்டாள் கமலா...

★

## பாரிஸில் இலக்கிய நிகழ்வுகள்

அண்மைக்காலமாக பாரிஸில், இலக்கிய நண்பர்கள் சிலரால் இலக்கியக் கருத்தரங்குகள் ஒழுங்கு செய்யப்பட்டு நடாத்தப்பட்டு வருகின்றன. கணிசமான தொகையினர் நிகழ்வுகளில் கலந்து கொண்டு சிறப்பித்தும் வருகின்றனர். நிகழ்வுகளின்போது பார்வையாளர்கள் மத்தியிலிருந்து எழும் கேள்விகளும் அவற்றிற்கான பதில்களும் நிகழ்வுகளை மேலும் மெருகூட்டிச்சிறப்பிக்கின்றன.

ராஜினி திரணகமவின் ஓராண்டு நினைவையொட்டி நினைவுப் பேருரை ( திரு. மு. நித்தியானந்தன் ), மறைந்த மலையக எழுத்தாளர் என். எஸ். எம். ராமையாவுக்கு அஞ்சலி செலுத்துமுகமாக மலையக இலக்கியம் பற்றிய ஆய்வு ( திரு. மு. நித்தியானந்தன் ), சர்வதேச புகலிட இலக்கிய ஆய்வு ( திரு. சுசீந்திரன் ) என்ற தொடரில் 13. 07. 91-ல் நடைபெற்ற கருத்தரங்கில் திரு. சி. சிவசேகரம், திரு. பத்மமனோகரன் ஆகியோர் ஆய்வுகளை நிகழ்த்தினார்கள்.

தமிழ் மரபெனும் மாமதில் என்னும் தலைப்பில் ஆய்வுசெய்த திரு. சிவசேகரம் அவர்கள், பாவனையிலுள்ள இரவற்சொற்களின் ஒலி வடிவங்களுக்குத் தமிழில் எழுத்துக்கள் இல்லாத குறையினை விளக்கி, அதனை நிவர்த்திசெய்யத் தமிழுக்குப் புதியசில எழுத்து வடிவங்களை அறிமுகப்படுத்தினார்.

திரு. பத்ம மனோகரன் அவர்கள் 1993-ல் ஒன்றிணையும் ஐரோப்பாவில் அகதிகள் நிலைபற்றி ஆய்வுரை நிகழ்த்தினார்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# சி. வைத்திலிங்கம்

**- எஸ். அகஸ்தியர்**

எழுதாத எழுத்துக்கு ஆலாய்ப்பறக்கிற ஒரு கொடிய நோய் இலக்கியப் பலகையில் கூத்தாடுகிறது.
ஈழத்துச் சிறுகதை மூலர் சி. வைத்தியலிங்கம் சிருஷ்டி இப்பதான் நூலாகிற்று என்றால் அந்தப் பொல்லாப்பை உரியவர்கள் - உறவினர் கள் வெட்கத்தோடு ஏற்கவேண்டும்.
இந்திய இலக்கிய சஞ்சிகைகளில் அக்கால அவர் இலக்கியப் பதிவு இலங்கையில் பேசிக்கொள்ளப்பட்டும் ஒரு நூலை வெளியாக்க அங்கும் வக்கற்ற மனப்பாங்கினர்க்கு இங்கே பாவாடை விரித்து - எவ்வளவோ சொல்லியாயிற்று. செவிடன் காதுச் சங்குதான்.
ஒரு படைப்பாளி மறைகிறபோது அவன் படைப்பைப் பற்றி ஒரு விமர்சனம் - ஆய்வு செய்யமுடியாத வாய்பாடு அறிமுகம் யாருக்குத் தேவை ? தெரிந்தவர்கள் படைப்பாளியோடு ஒட்டிக் கொள்ள ஆசைப்படுவது வீண்வேலையாகக்கூடாது.
இலங்கையிலேயே சாகித்திய மண்டலம் இந்தப் பரிசுகேட்டை ஒழுங் காகச் செய்திருக்கிறது. பெரிய விமர்சகர்களும் யானை பார்த்த குருடன் சாடை - முகமன் என்றும் சொல்லலாம் - ஓரங்க நாடகம் நடத்தியிருக்கிறார்கள்.
வர்க்கச்சார்பாக இருந்த போதும், அவர் எள்ளி நகையாடும் சாதாரண ஏழை எளிய மக்களின் பகைப்புலன்களையே மையமாகக் கொண்டிருந் தன. உள்ளார்த்தமாக நமது 'நான்கு பதினெட்டு' க் கலாசாரத்தை யாழ்ப்பாண மண் வளத்தோடு வாசனை சிந்தாமல் இலக்கிய நயமாகச் சொல்லக்கூடிய படைப்பாளிகளில் சி.வை. அவர்கள் எழுத்து விசேஷ முத்திரை பதித்தது.
இலங்கையர்கோன், தாழையடி சபாரத்தினம், அ.செ.முருகானந்தம், சம்பந்தன், ரசிகமணிகனகசெந்திநாதன் படைப்புக்களில் உள்ள இலக்கிய நயம் - யாழ்ப்பாணப் பிரதேச மண் வாசனை - அதன் லாவகம், மெருகு இன்றைய இலக்கியக்காரருக்கும் அந்நியமாகிவிட்ட அபத்தம் - அதன் பிரதிபலிப்பு,'கங்காதீபம்' நூல் காலங்கடந்து வந்து நிற்கிறது.
கொழும்பு மாநகரசபைக் கந்தோரில் அவரை 1953ல் சந்தித்தேன். முதற் சந்திப்பிலேயே இலக்கியத்துறைக்கும் அவருக்கும் சம்பந்தம் இருப்பதாக நம்ப மனசு மறுத்தது. போதாத வேளை, அவர் கையில்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

'பயில்'(FILE) கட்டு. என் கையில் 'மாபெரும் சதி'. வாங்கித்தட்டிப் பார்த்தவர் முகச்சுழிப்போடு திருப்பித் தந்தார். ஸ்டாலின் எழுதியதாகக் குறை. ட்ரொஸ்கியின் இலக்கிய விமர்சன மேதைத்தனத்தையும் அது கூறுகின்றது. படியாமல் விமர்சிக்கும் காழ்ப்பு, சி.வை.யிடமும் இருந்தது கண்டு வியந்தேன்.
'அதிகாரி'யாகவுள்ள இந்த சி.வை. தான் 'பாற்கஞ்சி' எழுதியவரா? என்று ஐமிச்சம்.'அடக்கம் ஆயிரம் பொன் பெறும்' என்ற அர்த்தமற்ற பழமொழியை நம்பிக் கெட்டவர்கள் அதிகம். நானும் தான். 'அப்பேர்ப் பட்ட பேர்வழியோ?' என்றும் யோசித்தேன். அப்படியாகவும் இல்லை.
அவர் மட்ட எழுத்துக்கு இலக்கிய வட்டம் இருந்ததேயன்றி, வாசகர் தொகை இருந்ததாக இல்லை. வாசகர் தொகை இலக்கியத் தரநிர்ணயிப்புக்கு அப்பவும் இப்பவும் முக்கியப்படுவதில்லை என்பதும் உண்மை. எனினும், வெகுஜனத்தொடர்புச் சாதனம் வாசகர் மட்டத்திலேயே மவுசு கொள்கிறது. இலக்கியக்காரன் இதற்கு விலக்கல்ல. சி.வை. அவர்கள் இதற்கு விலக்காயிருந்தார்.
அறிமுகப்படுத்திய என் நண்பர் செல்வாவுக்குச் சுட்டுப் போட்டாலும் இலக்கியம் வராது. ஆனால், கதைகள் கூறுவதில் வல்லவர். சந்தேகம் வலுத்தது.
'என்ன பகிடி விடுகிறீர்? இந்த இவரா சி.வை.?' என்று வினாவுகிற சாடையில் பார்த்தேன்.
நண்பர் உறுதி செய்கிற பாவனையில் சிரித்தார்.
சி.வை.யும் நண்பரும் ஒரே கந்தோரில் உத்தியோகஸ்தர்கள்.
"சரி காணவேணுமென்றீர். காட்டிவிட்டேன். உம்மைப் பற்றியும் தெரிந்தவர். பறையும், நான் பேந்து சந்திக்கிறன்" என்று நண்பர் நழுவினார்.
கண்டதும் காதல் வரவில்லை; கவர்ச்சியும் எழுவில்லை. நான் கேள்விப்பட்ட சாடை ஓர் இலக்கியக்காரன் போல் அவர் சம்பாஷிக்கவுமில்லை. எவ்வளவு ஆவலோடு சந்திக்கப் போனேன். சோர்ந்து போகவில்லை. அவர் முகத்தில் சாடையான ஊதாசீனம் இருந்தது. ஆனால், பார்வையில் அர்த்தபுஷ்டி. கௌவிக்கொண்டார். காரணம் என்னவாயிருக்கும் என்று நான் யூகித்துக் கொண்டிருக்கையில் அவர் சொன்னார்:
"பஞ்சம், பசி, பட்டினி, வறுமை, முதலாளி, தொழிலாளி, பாட்டாளி, கட்சி கிட்சி என்றெல்லாம் ஒரே பஞ்சப்பாட்டுப்பாடும் வரட்சி எழுத்து எனக்கு இலக்கியமாகப்படவில்லை. இலக்கியம் என்று வரும்போது அதற்கு ஒரு கலாரூபமுண்டு - கலை நயமுண்டு"
'கலை கலைக்காக' என்னுங் கோஷ்டிக்கு ஈழத்தில் இவர் கொடி தூக்கியதும் இல்லை. அப்படியிருக்க, இவர் மக்கள் மயப்பட்ட இலக்கியப் படைப்புக்களில் இப்படி வெறுப்படைய ஏது காரணம்?
விளக்கக்கூடிய பக்குவம் அப்போது எனக்கிருக்கவில்லை. ஒரு முதிய இலக்கியவாதிமுன் பதட்டம் தான் எஞ்சிநின்றது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

"ஏன் அப்படிச் சொல்கிறீர்கள்?" என்று கேட்டேன். "கலைப்படைப்புக் கள் யாரைப் பற்றியுமிருக்கலாம். ஆனால், கருத்தைப் போட்டுத் திணிப்பதற்காக உங்களிற் பலர் எழுதுவது......"
'ஒரு வகையில், உங்கள் படைப்புக்களில் தான் இயக்கவியல் மறுப்பு வாதக் கண்ணோட்டங்களை'வலிந்து' சொல்கிறீர்கள், என்று இக்காலத் திலெனில் ஆதாரத்தோடு விளக்கியிருப்பேன். 'வர்க்கம் சார்ந்து அவர் இலக்கியங்கள் எப்படி நிற்கின்றன' என்பதையும் அத்தாட்சிப்படுத்தியி ருப்பேன். அன்று அவருக்குச் சுத்தமாகப் பதில் அளிக்கும் போதம் நான் பெற்றிருக்கவில்லை.
எனினும், நான் அறிந்தவரை இப்படி நெற்றிக்கு நேரே வெளிச்சமாக மனந்திறந்து கருத்துச் சொன்ன அக்காலத்து இலக்கியவாதி இலங்கை யில் அவர் ஒருவர்தான். என்னை அவர்பால் அதிகம் ஈர்த்ததும் அதுதான். முகஸ்துதி பேசாத பெரும் மனிதர் அவர்.
பார்க்கப்போனால் இலக்கிய நயம், இலக்கியநடை என்கிற கலாபூர்வம் அற்ற எழுத்து, படைப்புக்களை ஆகர்ஷிப்பதில்லை. எழுத்தை ஆளத் தெரியாத மொழி ஒரு சதைப்பிண்டம்தான். புதுமைப்பித்தன் தமிழ் நடை இன்றும் சவால். ல.ச.ரா.,பிச்சமூர்த்தி, மௌனி, கு.ப.ரா., தி.ஜா னகிராமன், தி.ஜ.ர., சி.சு.செல்லப்பா, ஜெயகாந்தன், கு.அழகிரிசாமி, சு.சமுத்திரம், பிரபஞ்சன், ஈழத்தில் எமக்குள்ள ஒரு சிலரும் - சுந்தர ராமசாமி, 'ஒருபுளிய மரத்தின்கதை'யில் கொண்ட வெற்றி சி.வை. அவர்களில் அக்காலம் சார்ந்து நின்றமை குறிப்பிடத்தக்கது.
மாட்டிக் கொண்டேன். முதற் சந்திப்பில் சர்ச்சையாகியது. பாம்பின் வாய்த் தேரை. எமக்கு இரண்டு தசாப்தங்களுக்கு முன்பே ஈழத்துச் சிறு கதைகளுக்கு அற்புதமான கலைவடிவம் கொடுத்த அந்தப் படைப்பா ளியுடன் தர்க்கிக்க நான் தயங்கினேன். அவரிடமும் கற்றுக்கொள்ள வாஞ்சித்த மனம் அவர்தம் ஒவ்வோர் சொற்களிலும் சொக்கியது. கருத்தாழம் அவரிடம் ஒறுப்பாக இருந்தபோதும் பாஷை சங்கீதம் போல் வெளிவந்தது. அவர் உள்ளார்த்தமாகவே பேசினார். இன்றும் ஊசி குத்தின சாடை நினைவு.
அவர் உயர்வுக்கு அன்றைய என் முதற் சந்திப்பில் அவர் உரையாடல் அவருக்கு ஊறு என்று அன்று கருதினேன்; இன்றும் மாற்றமில்லை. பத்துப் பதினைந்து சிறுகதைகளோடு அவர் இலக்கியத் தாகம் தணிந் தது. அவர் இலக்கியப் படிகள் அவர் கந்தோருக்குள் முடங்கிய கார ணம் மக்கள் மயப்படாத அவர் போக்கு என்றும் சொல்லாம்.
எவ்வளவு நஷ்டம்? இலக்கிய உயிர்ப்போடு பேசிய அவர் இலக்கியம் நூலாக வெளிவர இவ்வாளவு தாமதம் தேவையில்லை. எவ்வளவு 'உரிமை'யோடு பேசுகிறார். இந்த 'உரிமை'தான் அவர் என்னைக் கணித்துக் கொண்டபோது எழுந்த சம்பாஷணை.பாம்பின் கால் பாம்பறியும்.
கருத்தியல் இலக்கிய நயத்துக்கு ஊறுசெய்வதில்லை. அது கலையில் எங்கும் சார்ந்தே வெளிப்படுகிறது.இலக்கிய நயம் மக்களுக்குப் புரியாத



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஒன்று அல்ல. அவரும் கருத்தியல் வாதிதான். இதனை அவருக்கு எடுத்துச் சொன்ன விதத்தில் சற்று மலைத்து நின்றார்.""அடிக்கடி சந்திப்போம்" என்றார். " அடிக்கடி என்ன ஓயாமல் சந்திப்போம்" என்றேன். 'சம்பிரதாயத்துக்காகச் சொல்கிறார்' என்று நினைத்தேன். அந்த நினைப்பு இருவருக்கும் ஒன்றாகவே அமைந்தது. சந்திப்பு இருக்கவில்லை. சில வருஷங்களுக்குப் பின் இலங்கை முற்போக்கு எழுத்தாளர் மகாநாட்டுக்கு சி.வை.வந்திருந்தார். கௌரவிப்புக்கும் நெருக்கத்துக்கும் உள்ளாகியிருந்த இந்த இரண்டாவது சந்திப்பே கடைசியாகவிருந்தது.

கல்கி, வ.ரா, கு.ப.ரா., க.நா.சு., பாரதி, ல.ச.ரா....போன்ற படைப்பாளி களின் கலைத்துவமான தாக்கங்கள் மட்டுமே அவரிடம் நெருங்கி நின்றன. ஆனால், புதுமைப்பித்தன் - பாரதி, வா.ரா. பார்த்த உலகம் இவரிடம் பஞ்சப்பட்டிருப்பதை அவதானித்தேன்.

தாழையடி சபாரத்தினம், இலங்கையர்கோன், சம்பந்தன், சி.வி.வேலுப் பிள்ளை படைப்புக்களில் உள்ள சமுதாயத் தாக்கம் சி.வை.அவர்களி டம் ஒறுப்பாகவிருந்த போதும், ரசிகமணி கனகசெந்திநாதனின் யாழ் மண் பாணி- வானொலி நாடகங்களில் 'சானா' போல்- சி.வை. கதைகளுக்கு வலுவூட்டிற்று. கி.வ.ஜ. கதை சொல்லும் உத்தி இவர் கதைகளில் வாலாயப்பட்டிருந்தது. கு.ப.ரா.வை வாசிக்கிற சுகானுப வத்தை நம் மண்ணினூடாக சி.வை. அவர்கள் எழுத்து அக்காலத்தில் பதிவு செய்தது.


80 வயது வரை அவர் எழுத்து நூல்வடிவம் பெறாமை வெறுக்கத்தக்க - சலிப்புக்கொள்ளத்தக்க ஓர் இலக்கிய உலகையே நமக்குக் காட்டி நிற்கிறது. 'கங்காதீபம்' தொகுதி இப்பவா வரவேண்டும்?என்று நினைக்க ஒரு விதத்தில் ஆத்திரம் கூட வருகிறது. இலக்கிய உலகம் கிடக்கட்டும். அவர் குடும்பத்தினர் எப்போதோ உணர்ந்திருக்கவேண் டும். எழுத்தாளனுக்குப் பெருமை என்று இங்கே சொல்வதெல்லாம் பெரும் ஏமாற்றுக் கூச்சல். அவன் விட்டுப் போன இலக்கியப்பதிவுதான் முதிசம். அதுதான் அவன் முக்தி. அவரவர் போக்கு அவரவருக்கு என்று வணிகபூதம் ஆக்கிவிட்ட அவசரயுகம். இலக்கியத்தைச் சந்தைப் படுத்தும் பணநாயக வழி இதற்கு இடையூறென்றால் தலைக்குக் கோடரிதான் பரிசு.அந்தப் பரிசுகேடு சி.வைத்திலிங்கம் அவர்கள் இலக்கியத்துக்கு ஒருபோதும் வராது; அவர் எழுத்து பொன்வாத்து முட்டை. ஈழத்து இலக்கியப் பதிவில் அவர் நமக்கெல்லாம் ஆதர்ஷ புருஷர்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# தலைநகரின் தரிசனம்



கோயில்கள் தோறும்
குவிந்து கிடக்கும்
பிச்சா பாத்திரங்கள்
வறுமையில்..........
வாடிய இதயங்கள்.

வெய்யிலில் கருகி
மழையில் நனைந்து
தெரு ஓரங்களே
திண்ணையாக.......
வறுமையின் பிரசவங்கள்.

கண்மூட மறுத்து;
கால் வயிற்றுக் கஞ்சிக்கு
தேம்பியழும் குழந்தைகள்.....

கோணிப்பை சுமந்து
குப்பையைக் கிளறும்
எச்சில் தொட்டியில்
சோற்றுப் பருக்கைகள்
தேடும்.........

உழைத்து....உழைத்து
களைத்துப் போன
உடல்......
கோவணத் துணியோடு
புரண்டு கிடக்கும்.

ஐந்நூறு மில்லிக்குள்
அவனது.......
ஆனந்த உலகம்.

இருளைக் கிழித்து.....
கொதிக்கும் வயிற்றுக்காய்
குழந்தையைக் கையிலேந்தி
இரவுச் சுந்தரிகள்.

நெஞ்சை எரிக்கும்
நிகழ்வுப் பொறிகளோடு
வெளிநாட்டு
முகவர்நிலையம்
நோக்கி.....

இலங்கையிலிருந்து
*டானியல் ஜீவா*

www.tamilarangam.net

# பாரதக் கதை

பாரதக் கதை

பாரதக் கதை

பாரதக் கதை



- கி. பி. அரவிந்தன்

இந்தியாவின் தேசிய தொலைக்காட்சி நிலையமான "தூர்தர்ஷன்" மகாபாரதம், இராமாயணம் தொடர்களை ஒளிபரப்பிய போதுதான் இமயம் முதல் குமரி வரையான பல்வேறு தேசிய இனமக்களை தன்பால் ஈர்க்கமுடிந்தது. இந்திய துணைக்கண்டத்தின் உள்ளக முரண்பாடுகளை, அவை கூர்மையடைவதை தணிக்க, இவ்விதாகசத் தொடர்கள் ஓரளவுக்கேனும் துணையாயின. ஆனால் இந்துத்துவ அடிப்படை வாதம் வளர்ச்சி பெறவும், மதவெறி தலைவிரித்தாடவும், இத்தொடர்கள் காரணமாயமைந்தன என சமூகவியலாளர்கள் கூறுகின்றனர். இத்தொடர்கள் ஒளிபரப்பப்பட்ட ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமைகளினதும் காலை 10 மணி தொடக்கம் 11 மணிவரையான ஒரு மணி நேரமும், இந்திய மக்கள் அனைவரும் தொலைக்காட்சிப் பெட்டிகளின் முன், பக்திப்பரவசத்துடன் அமர்ந்திருந்தனர்.

www.tamilarangam.net

மின்தடை காரணத்தாலோ, வேறு கோளாறுகளினாலோ, ஒளிபரப்பில் தடங்கல் ஏற்பட்ட போது பக்திப்ரவசம் வன்முறையாய் வெடித்தது.
தொலைக்காட்சிப்பெட்டிகள் உடைக்கப்பட்டு, பிராந்திய ஒளிபரப்பு அஞ்சல் நிலையங்கள் முற்றுகைக்கு உள்ளாயின. புகைவண்டிகளில் தொலை தூரங்களுக்கு பயணம் செய்வோரும், இத்தொடர்கள் பார்ப்பதைத் தவறவிட்டுவிடக்கூடாது என்பதற்காய் புகையிரத நிலையங்கள் தோறும் தொலைக் காட்சிப் பெட்டிகள் வைக்கப்பட்டன. ஒளிபரப்பப்படும் ஒருமணிநேரமும் புகைவண்டிகள், ஏதோ ஒரு புகையிரத நிலையத்தில் தரித்து நின்றன. இவ்விதிகாசத் தொடரினில் பாத்திரமேற்ற நடிகர்கள் புனிதர்களாய் கருதப்பட்டு, பொது இடங்களில் அவர்களைக் காண, தொட, மக்கள் கூட்டமாய் தவம் கிடந்தனர்.
நடந்து முடிந்த இந்திய பொதுத் தேர்தலின் போது இந்துத்துவ அடிப்படைவாத கட்சியான பாரதிய ஜனதாக்கட்சி பெருமளவில் வெற்றி பெறவும், இவ்விதிகாசத் தொடர்களும், இதில் நடித்தவர்களும் பயன்பட்டனர். இவ்விதிகாசங்களான, மகாபாரதமும், இராமாயணமும் தென் கிழக்காசிய பிராந்தியம் எங்கும் செல்வாக்கு மிக்க பழங்கதைகளாக விளங்குகின்றன.
ஒவ்வொரு பிராந்தியத்திலும் இக்கதைகளின் மூலத்தில் பெருமளவில் மாற்றமின்றி, வாய்மொழியாய், பழங்கதையாய், புராணமாய், புராதன இலக்கியமாய், பக்திநூலாய் கொள்ளப்படுகின்றன. குறிப்பாக இந்திய சமுதாயத்தின் பல்வேறு மொழிப் பிரிவினரிடையே, அவர்க்ள் வாழ்வுடனும் கலை இலக்கியத்துடனும் பின்னிப்பிணைந்துள்ளன.
அகண்ட பாரத கனவினாலோ, அமைதி காக்கும் நல்லெண்ணத்தினாலோ, இலங்கைத் தமிழர்களின் வாழ்வில் இந்திய இராணுவம் தலையிட நேர்ந்த அந்த துயர் மிக்க நாட்களில் மகாபாரதக்கதையினை இலங்கைத் தமிழர்களும் தொலைக் காட்சியில் பார்த்தனர்.
இந்திய இராணுவத்தின் "ஓய்வும் மனமகிழ்ச்சியும்" என முக்காடிடப் பட்டு, இந்திய வானொலி, தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் இராணுவ முகாம்கள் ஊடாக ஒளிபரப்பஞ்சல் செய்யப்பட்டன.
இலங்கையின் "ரூபவாஹினி" ஒளிபரப்பாகும் அதே அலைவரிசையில் "தூரதர்ஷன்"ம் ஒளிபரப்பப்பட்டதானது "இந்தியத் திணிப்பு" என்னும் நல்நோக்கத்தை உணர்த்தும் சான்றாகும். இந்திய இராணுவத்தின் தொலைக் காட்சி நிகழ்ச்சிகள் தொல்லைமிக்க அறுவையாக இருந்த போதும், வீட்டிற்குள் அடைபட்டிருக்கவேண்டிய நேரங்களில், அதுவும் மின்சாரம் தடைபடாது இருக்கையில், தொலைக் காட்சிப் பெட்டிகளின் முன் தான் மக்கள் தஞ்சமடைந்தனர். இருந்தும் இந்நிகழ்ச்சிகளில் ,"மகாபாரதத் தொடர்", இந்தியாவின் புகழ்மிக்க இயக்குனர் சியாம் பெகைல் தயாரித்தளித்த நேருவின்"இந்திய வரலாறு" என்னும் தொடர், என்பவை குறிப்பிடத்தக்கவையாகும். அத்துடன் இந்திய தேசிய விருது பெற்ற சில திரைப்படங்களையும் பார்க்க முடிந்தது சிறப்பம்சங்களாகும்.

www.tamilarangam.net

மகாபாரதத்தினை தயாரித்த பம்பாய் படமுதலாதளியின் நோக்கம், புனிதத்தன்மையையும், தெய்வாம்சத்தையும் உயர்த்திக் காட்டி, ஆடை, அணிகலன், மாயாஜாலதந்திரக் காட்சிகள், சோடனைகள் என்பவை மூலம் மக்களை சொக்கவைத்து , பக்திப்பரவசமூட்டி, வியாபாரம் செய்வது என்பதேயாகும்.

இந்திய இராணுவம் இதனை இலங்கைத்மிழர்களுக்கும் ஒளிபரப்பிய தானது, அவர்களைப் பக்திப்பரவசத்துள் ஆழ்த்துவதும் சிந்தனையை திசை திருப்புவதும் போன்றதான பலநோக்கங்களை உள்ளடக்கிய இராணுவ நல்லெண்ணத்தினாலேதான்.

ஆனால் மகாபாரதம் பக்திப்பரவசமூட்டுவதற்குப் பதில் எதிர்விளை வையே உண்டுபண்ணி இருக்கவேண்டும். பக்திப் பரவசமூட்டவா மகாகவி பாரதி, பாரதக்கதையின் "பாஞ்சாலி சபதத்தை"மீண்டும் எழுதினான். கவிதையில் பேசினான்.

இம்மாதத்தில் - ஜூலையில் - பிரான்சிலுள்ளவர்களும், மகாபாரதத் தினை தொலைக் காட்சியில் பார்த்தனர்.

89ம் ஆண்டில் இரு மொழியில் தயாரிக்கப்பட்ட இத்தொடர் பிரான் சுக்கு இரண்டாண்டுகள் காலந்தாழ்த்தி ஒளிபரப்பப்படுவது ஏனென்று தெரியவில்லை.

இந்தியா ஒளிபரப்பிய மகாபாரத தொடரினின்றும் பல்வேறு அமசங்க ளில் வேறுபட்ட தன்மையும், குணாம்சமும் கொண்ட ஐரோப்பிய மொழி பேசும் இம்மகாபாரதம் பீட்டர் புருக்- PETER BROOK- என்னும் 65 வயதான கலைஞனின் கைவண்ணத்தில் உருவாக்கம் பெற்றதாகும். மருந்து தயாரிக்கும் ரஷ்யனின் மகனாய் லண்டனில் பிறந்த பீட்டர் புருக், ஒக்ஸ்பேட் பல்கலைக்கழகத்தில் தொழில் முறை நாடக இயக் குனராய் படித்து சான்றிதழ் பெற்றவர். 1970ம் ஆண்டில் இருந்து பாரிசில் வாழ்ந்து வரும் பீட்டர் புருக் அவர்கள் சர்வதேச நாடக ஆய்வுமையத்தினையும்- INTERNATIONAL CENTER OF THEATER RESEA- RCH.- நிறுவியுள்ளார். "குரு", "ரிஷி", "முனிவர்","அறிஞர்" என பல்வேறு பெயர்களால் அன்புடனும், மரியாதையுடனும் அழைக்கப்படும் இவர், உலகில் வழங்கிவரும் புராதன இலக்கியங்களிலும், இதிகாசங்களிலும் ஆழ்ந்த புலமையுள்ளவர். ஏழு மொழிகளைக் கற்றறிந்தவர்.

தற்போது ஆங்கில பெருங்கவி ஷேக்ஸ்பியரின் THE TEMPEST ஐ பிரெஞ்சு மொழியில் தயாரித்துக் கொண்டிருக்கின்றார்.

"மூலக்தையில் மாற்றமின்றி நவீனப்படுத்துவதிலும், தன் எண்ணத்தை அவையூடே - வெளிப்படுத்துவதிலும் வல்லமை மிக்கவர். ஒப்பிடத்தகுந் தவர் யாருலமில்லை" என விமர்சகர்க்ள இவர் பற்றி குறிப்பிடுகின்ற னர்.

அவரது மகாபாரதத்தில் இக்கலை வல்லமையை நாம் தரிசிக்க முடி கின்றது.

நாமெல்லாம் படித்த, கேட்ட, கோவில்களில் பாகவதம் செய்யப்பட்ட மகாபாரதக் கதை தானே இது - ஆசியாவின் தென்கிழக்குப் பகுதியில்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வழங்கி வந்த இந்த இதிகாசத்தினை எத்துணை கலைத்துவத்துடன், ஆற்றலுடன் படைத்தளித்துள்ளார். சர்வதேச மயப்படுத்தியுள்ளார்.

மகாபாரதம் மனிதனின் ஆதிஇலக்கியம் என கருதுகின்றார் பீட்டர் புருக் அவர்கள்.

ஒவ்வொரு காட்சியையும் மிகுந்த கலைநுணுக்கத்துடனும், கூரிய பார்வையுடனும், வரலாற்று உணர்வுடனும், அமைத்துள்ளார்.

கதையில் எந்த அம்சத்தையும் தன்கருத்துக்கு மாற்ற அவர் முனைய வில்லை.

ஆனால் மகாபாரதம் - அவரது உயர் எண்ணங்களான - சர்வதேசியம், மனிதமூலம், நாகரிக வளர்ச்சி, மனிதகுடிப்பரம்பல் - என்பவற்றையெல் லாம் வெளிப்படுத்துகின்றது. என்ன ஆச்சரியம். இது என்ன கலை ஆற்றல். கதையின் பாத்திரங்களுக்கு நடிகர்களைத் தெரிவு செய்துள் ளமையே அவரின் எண்ணக்கருத்துக்களை முதலில் எமக்கு புலப்படுத் துகின்றன. மனிதமூலம் ஒன்றேயான போதும், மூன்று நிறங்களுக்குள் மனிதன் பிரிக்கப்பட்டுள்ளான்.

பீட்டர் புருக் அவர்கள் இவ்விதிகாசத்திற்கும், இம்மூன்று நிறங்களில் இருந்தும் - கறுப்பு - வெள்ளை - மஞ்சள் - நடிகர்களை தெரிவு செய்துள்ளார். பாரதக் கதையில் துரோணாச்சாரியார் பாண்டவர்க ளினதும், கௌவரவர்களினதும் ஆசானாவார்.பீட்டர் புருக் இப்பாத்தி ரத்திற்கு மஞ்சள் நிற நடிகரை தெரிவு செய்துள்ளார். ஆசியாவின் கிழக்குப் பகுதியில் வாழும் மங்கோலிய இன மஞ்சள் நிற மக்கள்(குறிப் பாக சீன, யப்பானியர்...) தற்காப்பு கலைகள் அனைத்திலும் திறன் மிக்கவர்கள். துரோணரின் பாத்திரம் இப்பின்னணியிலேயே சித்தரிக் கப்படுகின்றது. எத்தனை பொருத்தம்.

இப்படியே பாத்திரங்கள் அனைத்திலும் பிட்டர் புருக் தனது எண் ணத்தை மிக லாகவமாய் வெளிப்படுத்துகின்றனர். பார்வையாளர்களில் சர்வதேசியத்தை தொற்ற வைக்கிறார். பாரதப்போர் தொடங்குகின்றது. 18 நாள் யுத்தம் - குருசேஷ்திரம். ஒவ்வொரு நாள் யுத்தத்திலும் திறன் மிகு வல்லாளர்கள் தலைமையேற்கின்றனர்.

பீட்டர் புருக் நாகரிக வளர்ச்சியை, காலஇடைவெளியை,மிக நயத்துடன் இதில் எமக்கு அறிமுகப்படுத்துகின்றார். பாரதக்கதையில் மூத்தவர் பிதாமகர் என வர்ணிக்கப்படும் பீஷ்மர் கங்கையின் புத்திரன் என கூறப்படுவார். இவர் குருஷேஸ்திர யுத்தத்தில் தலைமையேற்கையில்"-பல்லக்கில்" அமர்ந்துபோரிடுவர். இறந்தவர்களை சுமப்பது பாடை. உயிருடன் உள்ளவர்கள் பவனி வருவது பல்லக்கு. தேரும், வண்டியும் இல்க் காலத்து வாகனம். பீஷ்மர் வீழ கர்ணன் போருக்குத் தலைமை யேற்பான். கர்ணன் குதிரைகள் புட்டிய தேரில் போருக்கு வருவான். அவனது தேர்ச்சக்கரம் மண்ணுக்குள் புதையும்.

இப்படியே ஒவ்வொரு காட்சியும், சம்பவமும் நகர்ந்து செல்லும். பட்டுப்பீதாம்பரங்கள், பொன்னாபரணங்கள், முடிகொடி செங்கோல் எவையுமின்றியே, பாத்திரங்களை வேறுபடுத்தி பார்வையாளருக்கு

www.tamilarangam.net

அடையாளம் காட்டுகின்றார். கதர்நூல் சேலைகளும், சால்வைகளும், சட்டைகளும், வேட்டிகளும் பாத்திரங்களின் ஆடையலங்காரங்களாகி, மனிதகுணாம்சங்களுடனும், உணர்வுகளுடனும் உலவுகின்றன. பாத்தி ரங்கள் தெய்வாம்சம் கொள்ளவில்லை. கதைமுழுதும் உயர்வு நவிற்சி யின்றி, மிகைப்படுத்தலின்றி, இயல்பாய், பார்வையாளனுக்கு நெருக்க மாய், மகாபாரதம் படைக்கப்படுகின்றது.

கலையும் உணர்வும் கலந்த கலவையாக, பார்வையாளர் கலைவடிவத் துடன் ஒன்றித்து விடுகின்றனர். மானுடத்தின் மூல இலக்கியங்களில் ஒன்றெனத் தான் கருதும் மகாபாரதத்தினை நவீன ஊடகத்தில் இணைத்து, "சர்வதேச மயப்படுத்தி" அடுத்த யுகத்திற்கும் கையளிக்கும் பணியினை முடித்துள்ளேன் என்ற பெருமிதத்தில் பீட்டர் புருக் என்னும் மாபெரும் கலைஞன் புன்முறுவல் பூத்து நிற்கின்றான்.

★

உங்களுடன்....
வணக்கங்கள்.
'காலாண்டிதழை இருமாத இதழாக நகர்த்துவோமா?'
அடியெடுக்க, "இல்லை! இன்னும் கொஞ்சம் தாமதி!" என மிரட்டுகிறது பொருளாதாரப் பூதம்.
சரி, அது புறமிருக்க, இந்த இதழுக்குக் கைவசம் கிட்டிய ஆக்கங்களை ஒருங்கு சேரத்தொகுத்துப் பார்த்தபோது, எமக்கே ஆச்சரியமா இருந்தது.
நிறம் சம்பந்தமான பிரச்சினை இதழினூடு வெளிப்படுவதை அவதானிக்கமுடிந்தது.
இவற்றுள் ஒரு சிலவற்றைத் தவிர்த்து, வேறு சில ஆக்கங்களைச் சேர்ப்போமா! எனவும் எண்ணிப் பார்த்தோம்
ஆனால், "ஏன்!" என்ற கேள்வி ஆணித்தரமாகவே மறுத்தது.
எம்மைச் சுற்றிலும், ஏதோ ஒரு வகையில் இந்தப்பிரச்சினை சூழ்ந்திருப்பதால் அதன் வெளிப்பாடுதானே இது!
எனவே, அப்படியே விட்டு விடுகின்றோம்.
உங்கள் அபிப்பிராயங்களை, 'ஓசை' பற்றிய ஒட்டுமொத்தமான விமர்சனங்களை உரிமையுடன் பகிர்ந்து கொள்ளுங்கள்.
நன்றி.
-'ஓசை'.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# சின்னாச்சி

*இந்தக் கிழவன் வேலையெண்டா வேலை, வீட்ட வந்து சப்பினாச் சப்பினெண்டு கிடக்காம, தேவையில்லாத ஊர்வம்புகளையல்லே விலைக்கு வேண்டிக்கொண்டு திரியுது*

*இந்தப் பிள்ளையளுஞ்சரி, நாலுஞ்சரி கத்தாத நாள் இல்லை. மனுச னும் கேக்கிற பாடில்லை. வீட்டை விட்டு வெளியில இறங்கினால் ஏதாவது பிரச்சினை யொண்டோடதான் வந்து சேருது.*

*உப்பிடித்தான் பாருங்கோ, போனகிழமை- பெரிய வெள்ளியெண்டு, ஒருக்கால் கோயில் பக்கம் போட்டு வாறனண்டு வெளிக்கிட்டுது. இதென்னடா இது! இருந்தாப் போல வெளிக்கிடுது - சரி போட்டு வரட்டுமன் எண்டு பாத்தால்...!*

*அவர் அண்டைக்கு வரேக்கயே, மம்மிக்கொண்டு வந்து நுழைஞ்ச விறுத்தத்தில் எனக்கு விளங்கிப் போச்சு - ஏதோ சங்கிராந்தி நடந்து தான் இருக்கெண்டு. பிறகிப்ப மூத்தவள் வந்து சொல்லத்தானே விசயம் வெளிச்சுது.*

*ஆளைப்பார் மூலைக்கை முழுசுக்கொண்டு கிடக்கிற வடிவை, கரு வாடு களவெடுத்த கள்ளப் பூனை மாதிரி.*

*ஆரும் அவளவை என்னத்தையும் கதைச்சுப் போட்டுப் போகட்டுமன். அதோட பெண்டுகள்கதைக்கிற இடங்களில் இவருக்கென்ன அலுவல்!*

*அவள் ஒருத்தி. அவளவையும் அதுதான். இஞ்ச ஒவ்வொருத்தரும் படுகிற பாட்டுக்க - தாங்கள் ஏதோ கப்பல் ஓடுறம் எண்ட நினைப்பு.*

*அவ தேவியண்டவ, வாய்க்கால ஒழுகஒழுக உறிஞ்சிற விறுத்தத்துக்கு, அந்த இடத்தில நிண்டிருந்தா சத்தியமாய் எனக்குக்கூடத்தான் ஏறிக் கொண்டு வந்திருக்கும்.*

*"எங்கட பிள்ளையள் பாருங்கோ, உந்தக் கறுவல்ப் பிள்ளையளோட சேரவே மாட்டுதுகள். பிரெஞ்சுப் பிள்ளையளெண்டால் கட்டிப்பிடிச்சு விளையாடுங்கள்".*



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இதை அவ தன்ர தோரணையில் சொல்ல - ஐயோ! இந்த மனுசன்-மண்டை மண்டையெண்டு குத்தி என்ர மண்டை தான் நோகுது - பக்கத்தில நிண்டது ஏதோ குத்தலாகச் சொல்லிப்போட்டுது.
அவளென்னடாண்டா, இப்ப அட்டட்டாரே மட்டக்களப்பாரே எண்டு ஊரைக்கூட்டியல்லே குத்தி முறியிறாள்.
சத்தியமாய் நீங்கள் யோசிச்சுப் பாருங்கோ! என்ர மனுசன் கதைச்சதில தான் என்ன பிழை?
**உவளவை எல்லாருக்கும் இங்க வந்த உடன தாங்கள் 'வெள்ளையள்' எண்ட நினைப்பு.**
பச்சப்பாலனுகளை, அவன் 'கறுவல்',இவன்'அடையான்' அவனோட சேராத, இவனோட சேராத எண்டு வெருட்டி மறிச்சுப் பிரெஞ்சுப் பிள்ளையளோட சேரப்பண்ணிப் போட்டு பிறகு வந்து விண்ணாலங் கதைச்சால் ஆருக்குத்தான் கோவம் வராது?
வேறயொண்டுமில்லை. தாங்களுங்கறுப்புத் தானே எண்டது அங்க கிடந்து குடைஞ்சு கொண்டு கிடக்கு அதை மறைக்கத்தான்.
வடிவா யோசிச்சுப் பாருங்கோ! பாலனுகளுக்கு கறுப்பையும் வெள் ளையையும் வித்தியாசந் தெரியுமே!
ஊரிலயும் சாதி வித்தியாசம் பாக்காம, பக்கத்து வீட்டுப் பள்ளிக்கூடப் பிள்ளையளோட குழந்தையள் பழக, அதுகளை வெருட்டி மறிச்சுத் தங்கட சாதித்திமிரைக் காட்டிற கூட்டமல்லே! அதுதான் இஞ்சயும் தொடருது.
பிஞ்சுகளின்ர நெஞ்சில நஞ்சயல்லே விதைக்கிறாளவை. இதுகள் தானே பிறகு வளர்ந்து வெடிக்கிறது.
வெளியில சொல்ல வெட்கமாத்தான் கிடக்கு. ஆனா என்ர சூத்தை யையும் ஏன் மறைப்பான்!
**அங்க இருந்த காலத்தில என்ர குடும்பத்துக்கேயும் இது நடந்தது தான் பாருங்கோ!**
அவன் தான் என்ர மூத்தவன் - நடராசன் - அவன்ர நடுவில் பொடிச்சி- அதுக்கப்ப நாலரை வயசு நடக்குது. ஒரு நாள் பள்ளிக்கூடத் தால வரேக்க தன்னோட படிக்கிற பொடிச்சியொண்டையும் கூட்டிக் கொண்டு வந்திட்டுது. அது குழந்தையல்லே! அதுக்குத் தெரியுமே இவயளின்ர வித்தியாசங்கள். எல்லாரும் மனுசசாதிதானே! பிறகென்ன வித்தியாசமெண்டு நினைச்சிருக்கும்!
வந்த பொடிச்சியை வாசல் படியிலேயும் ஏறவிடாமல் அடிச்சுக்கலைக்க - அதுகும் பாலனல்லே! கண்றாவி! அதுக்கு ஒண்டும் விளங்காம விக்கி விக்கிக் கொண்டு திரும்பிப்போக, என்ர பேரப்பொடிச்சி இதைத்தாங் கிக் கொள்ள மாட்டாம - என்னண்டு தாங்கும்! - மூண்டு நாளா அன்னந்தண்ணியுமில்லாம கேவிக்கேவி அழுதபடி திரிஞ்சது இப்பவும் என்ர கண்ணுக்க நிக்குது!
**உண்மையாத் தான் சொல்லுறன்! எங்கட - எங்கட என்டேன் பிறிச்சுச் சொல்லுவான்!** நாங்கள் போறபோக்குகள் கொஞ்சமும் சரியாத்

www.tamilarangam.net

தெரியேல்லை. எங்களுக்கு கவுரவம் எண்.டா என்னா! அந்தஸ்து எண்.டா என்னா..! ஒரு கோதாரியும் விளங்கேல்ல!
ஆ! நாசமாப்போன என்ர வாய் - சும்மா இருக்கேலாம அந்தக் கிழவனைச் சொல்லிப் போட்டு இப்ப சந்தியில வந்து நிண்டல்லே கத்திறன். இது எக்கணம் எங்க போய் நிக்கப் போகுதோ! என்ர ஐயோ....!



The walk to parad[illegible] garden

பரிஸில் -G.POMPIDOU நூலகத்தில் நடைபெற்ற புகைப்படக்கண்காட்சியொன்றின் போது பார்வையாளர்களை அதிகம் கவர்ந்ததும் - மிக அதிகளவில் விற்பனையானதுமான இப்புகைப்படம் W.Eugene Smith என்னும் அமெரிக்கப் புகைப்படக் கலைஞனின் புகைப்படங்களில் ஒன்றாகும்.

'புகைப்படங்கள் காலத்தையும் வாழ்வின் இருப்பினையும் பதிவு செய்கின்றன' என்னும் வகையில், 2ம் உலகமகாயுத்தத்தின் கோரங்களும் ஆபிரிக்க மக்களின் வாழ்வும் இவரது புகைப்படக் கருவியினூடு வெளித் தெரிகின்றன.

www.tamilarangam.net

கோலம்:

# ஆரோடு நோக..

- புவனன்

'ஹலோ!'

'ஹலோ!'

'......'

'ஹலோ யார் கதைக்கிறீங்கள்?'

'ஹலோ!'

'ரெலிபோன் பூத் பழுதோ!'

'ஹலோ! 'பூத்' பழுது போல இருக்கு. வேற'பூத்'ல போய் எடுங்கோ'

'இல்ல அக்கா அது பழுதில்ல!'

'என்ன புதுக்குரலா இருக்கு!'

'ஹலோ யார் கதைக்கிறீங்கள்?'

'......'

'சத்தத்தைக் காணேல்ல!'

'...ஸ்...ஸ்... உஃபிக்... உஃபிக்...உஃபிக்....'

'ஆர் அங்க சேட்டை விர்றது! PHONE ஐ வைக்கட்டே?'

'இல்ல அக்கா வைச்சுப்போடாதேங்கோ!'

'ஆர் நீங்களெண்டு சொல்லுங்கோ முதல்ல!'

'அக்கா! அத்தான் இல்லைப் போல.'

'...........'

'வேலைக்குப் போட்டார் என்ன! எனக்குத் தெரியும்.'

'...........'

www.tamilarangam.net

"என்னக்கா பேசாமல் நிக்கிறீங்கள்?"

"............"

"தனியத்தானே நிக்கிறீங்கள். வரட்டே! அல்லாட்டி நீங்கள் 'மெத்ரோ'க்கு வாறிங்களே! வந்து கூட்டிக்கொண்டு போறன்"

'றாஸ்கல்! ஆரோ, தனிய இருக்கிறன் எண்டதைத் தெரிஞ்சு கொண்டுதானே சேட்டை விர்றான். அக்கா தங்கைச்சியோட கூடப் பிறக்கேல்லப் போல, நாயள்.'

"..........."

"அக்கா, அக்கா, அக்கக்கா! என்னக்கா!"

'சனியன்களுக்குப் பாட்டு வேற. இதுகளோட என்னத்தைக் கதைக்கிறது: வரட்டுக்கும் இவர்!'

.....க்ளக்....

\# \# \#

"என்ன றேணு! 'உம்' மெண்டுகொண்டிருக்கிறீர்?"

"..........."

"என்ன றேணு!"

"..........."

"தென்னடா இது!"

"ஓ...உங்களுக்கென்ன! அப்பவும் சொன்னான். இந்தப்பரிஸ் வேண்டாம்.நாங்கள் செத்தாலும் பரவாயில்லை சிலோனுக்கே போவமெண்டு...."

"இப்ப...இப்ப...என்ன நடந்தது! ஏன் அழுகிறீர்?

"பின்ன என்ன! நீங்கள் வேலைக்குப் போயிடுவியள், நான் இஞ்ச தனிய இருந்து...."

"தனிய இருந்து...!"

".....காவாலி நாயள் யாரோ ரெலிபோன் பண்ணி என்னென்னவோ எல்லாம் கேட்கிறாங்கள்...!"

"ஓகோ! அந்தப் பிரச்சினையே! அது இஞ்சேயும் வந்திட்டுதே! இதெல்லாம் பாரிஸில நோ(ர்)மல் செல்லம். இதுக்குப் போய்...."



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

"ஓ.உங்களுக்கென்ன! இஞ்ச எனக்கு தனிய இருக்கப் பயமா இருக்கு...."

"இதுக்கு நான் இனி இன்னொரு கலியாணமல்லோ கட்டவேணும் போலகிடக்கு!

"உங்களுக்குப் பகிடியா இருக்கு. நீங்கள் வரும் வரைக்கும் நான் நடுங்கிக்கொண்டிருந்தது ஆருக்குத் தெரியும்?"

"அழாதேயும்! அழாதேயும்! இது அநேகமா எல்லாத் தமிழாக்களின்ர வீட்டிலேயுந் தான் நடக்குது."

"இந்த நாயள் என்னத்துக்கு இப்பிடிச் செய்யிறாங்கள்?"

"இது றேனு! ஒரு பிரச்சினை!"

"என்ன பிரச்சினை?"

"அது... இஞ்சத்தச் சூழலும் ஒரு பக்கம்தான். கனபொடியள் இஞ்ச வயசாகியும் கலியாணம் கட்டாமல் இருக்குதுகள்.

"அதுக்கு!"

"அடிக்காதேயும்!அடிச்சகாதேயும்! அதுகளுக்கு இப்பிடி 'ரெலிபோன்' பண்ணி பொம்பிளையளோட கதைக்கிறதில ஒருதிருப்தி. அதோட'தண்ணியும்' அடிச்சிட்டா நரம்புகளும் வேற முறுகிக்கொண்டு நிக்கும். பாவங்கள் தானே! கதைச்சுப் போட்டுப்போகட்டுமன். இனிமேல் இப்படிப் போன் வந்தால் ஆத்திரப்படாதேயும். அமைதியாய்க் கொஞ்சம் அட்வைஸ் பண்ணிவிடும். பயப்பிடாதேயும் என்ன!

"இதென்ன இது! நினைக்கச் சிரிப்பாயல்லோ இருக்கு!"

"சிரிப்புத்தான்! அதேநேரம் கவலையுந்தான்!"

# # #

"ஹலோ!"

"ஹலோ யார் கதைக்கிறீங்கள்?"

"ஹல்லோ! ...அக்கா!"
'ஓகோ,இது அவர்தான். இவங்களுக்கு ஆகப்பயந்துகொண்டிருந்தால் தலைக்கு மேல ஏறிவிடுவாங்கள் ..க்கம்..'
"ஓ...தம்பியே! என்ன ரெண்டு நாளாப் PHONE பண்ணேல்ல எண்டுபாத்தன்!"

" ! "

" என்ன தம்பி சத்தத்தைக் காணேல்ல?"

" ! "

www.tamilarangam.net

"உம்மடை பிரச்சினை பற்றி இவரோட கதைச்சனான். உங்கட வருத்தங்கள் விளங்குது!"

"........."

"நீர் ஒரு கலியாணத்தைக் கட்டிறதுக்கு வழியைப் பாருமன்! சும்மா என்னத்துக்கு ரெலிபோனுக்குக் காசுகளைச் சிலவழிச்சுக் கொண்டு....!
வீட்டில கதைச்சுப் பேச வெக்கமெண்டா addressஐத்தாருமன் - வீட்டுக்கு எழுதிவிடுறன்! எது வசதி!

" ! ! "


"என்ன தம்பி சத்தத்தைக் காணேல்ல?"

" ! "

"தம்பி! உமக்கு அக்கா தங்கச்சி இருக்கோ இல்லையோ தெரியாது. ஆனா நாங்கள் அண்ணன் தம்பியோட தான் கூடப்பிறந்தனாங்கள். உங்கட பிரச்சினையள எங்களால விளங்கிக் கொள்ளமுடியுது. உங்கட பிரச்சினையளத் தீர்க்கிறதுக்கு நாகரீகமான வழிவகையளைப் பாருங்கோ! அதுதான் நல்லது. இப்பிடிப் பொம்பிளையள் தனிய இருக்கிற வீடுகளுக்கு PHONE பண்ணி அரியண்டம் செய்யிறது -..அது.... அசிங்கம். இனிமேல் இப்பிடிச் செய்யாதேங்கோ....என்ன! நல்லபிள்ள தானே! என்னடி....!"

"! ! !"

.....க்ளக்......



www.tamilarangam.net

# என்னதான் நடக்கிறது ?

அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளில் வாழும், மக்கள் மேலைத்தேசத்தை நோக்கி விரும்பியோ விரும்பாமலோ ஓர் அமைதியான படையெடுப்பைக் காலத்துக்காலம் நடத்தியே வந்திருக்கின்றனர். பொருளாதார, அரசியல் சிக்கல்களிலிருந்து விடுபடவும் வளமான வாழ்க்கை நடாத்தவும் மக்கள் இப்படிச் செய்தது,செய்து கொண்டு வருவது தவிர்க்கமுடியாததொன்றாகிவிட்டது. இப்படையெடுப்பை முறியடிக்க மேற்கத்தைய நாடுகள் தீவிர பிரயத்தனம் செய்துவருதும் கண்கூடு. இன்று பிரெஞ்சு அரசியலில் "வரம்பு மீறிய குடிவரவு" மற்றும் "அரசியல் தஞ்சம்" போன்ற விடயங்கள் அடிக்கடி வலம் வருவது தினசரி நிகழ்ச்சிகளாகும்.

இது இப்படியிருக்க, இப்படியான "படையெடுப்புகள்" மூலம் இம்மேற்கத்தைய நாடுகளுக்கு வந்தோர் எப்படி வாழ்கிறார்கள்? உண்மையில் என்ன தான் செய்கிறார்கள்? இவர்களைச் சூழ நடந்துகொண்டிருக்கும் நிகழச்சிகளை இவர்கள் கவனத்துக்கு கெடுக்கிறார்களா? 'நம்மைச் சூழ நடக்கும் நிகழ்வுகள் நமக்கல்ல; இது அவர்களுக்குத்தான்' என்ற கண்மூடிமந்திரத்தைத் தான் இன்றும் உச்சரிக்கிறார்களா? இதுபோன்ற நீண்ட பெரும் கேள்விகளுக்கு விடையளிப்பதென்பது எளிய விடயமன்று.

'எமக்கல்ல இது அவர்களுக்கு' என்று கூறியபடியே எம்மையே நாம் மூடர்களாகவும் அறிவிலிகளாகவும் ஆக்கி மற்றவர்களிடமிருந்து எம்மை நாமே தனிமைப்படுத்திக் கொண்டு 'இத்தாழ்வுச் சிக்கலுடன்' இன்னும் எவ்வளவு காலம் தான் இப்படி வாழப்போகிறோம்?

மேற்கு ஜேர்மனி, பிரான்ஸ், இங்கிலாந்து, டென்மார்க், ஒல்லாந்து, கனடா என்று நம்மவர்கள் பரவி வாழும் நாடுகள் தான் எத்தனை? தொகை தான் எவ்வளவு? துரதிஷ்டவசமான இலங்கை அரசியல் விநோதங்கள் இன்று இலங்கைத் தமிழர்களாகிய நம்மை பரிதாபத்துக்குரிய அகதிகளாக்கி விட்டநிலையில் நாம் இந்நாடுகளில் 'ஒட்டாமலும் - வெட்டாமலும்' திரிசங்கு சுவர்க்கத்தில் இன்னும் எவ்வளவு காலம் தான் வாழப்போகிறோம். "அப்பா, "சிஸ்"(SIX)க்குப் பிறகு வாற "செத்"(-SEPT)தை என்னெண்டு தமிலிலை சொல்லுறது" என்று மழலை மொழியில் கேள்வி கேட்கும் சின்னஞ்சிறார்களுக்கு 'ஆறுக்குப் பிறகு ஏழு' அல்லது "சிஸ் "(SIX)க்குப் பிறகு "செத்"(SEPT)என்று பிரித்துக்கூறும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அளவுக்கு அம்மாவோ அப்பாவோ சிரத்தையெடுக்கிறோமா? இங்கு பிரச்சினை 'ஆறுக்குப் பின் 'ஏழு' என்பதோ "SIX"க்குப் பின் "SEPT" என்பதோ அல்ல. வேறுபட்ட இரு தலைமுறைகள் வளர்ந்துகொண்டிருக்கும்போது இதன் பிரதிவிளைவுகள்....

எம்மைச் சுற்றி நடக்கும் நிகழ்ச்சிகளைக் 'கவனத்து'டன் பார்க்கிறோமா அல்லது வெறும்'வேடிக்கையாகப்'' பார்க்கிறோமா என்ற கேள்வியில் தான் பலவிடைகள் மறைந்து கிடக்கின்றன. இற்றைக்குப் பத்துப் பதினைந்து வருடங்களின் முன் நம் இலங்கையர் குறிப்பாக 'இலங்கைத் தமிழர்கள்' மேற்கு நாடுகளுக்கு வந்தபோது இருந்த மனோநிலை வேறு; இன்றுள்ள மனோநிலை வேறு. ஏதோ இரண்டொரு வருசம் உழைத்துவிட்டு ஊருக்குப் போவோம் என்றவர்களும், கொஞ்ச நாளில் "நிலைமை சீரான"தும் திரும்பி விடுவோம் என்றவர்களும் ஐந்து அல்லது ஆறு "இரண்டொரு வருடங்க"ளைக் கண்டுகொண்டு அங்குமில்லை; இங்குமில்லை என்று இரண்டும் கெட்டான் நிலையில் வாழ்கிறோமா இல்லையா?
அதுவரையில் நாம் வாழும் நாடுகளில் எம்மால் என்னென்ன நல்ல விடயங்களை அறியத், தெரியப், படிக்க முடியுமோ அவற்றை அடையமுயல்வது எமது நாட்டுக்கோ அல்லது நாம் வாழும் நாடுகளுக்கோ செய்யும் "துரோகம்" அல்லவே! அப்போ ஏன் தான் தயக்கம்?
விஞ்ஞான சாதனங்களின் வளர்ச்சியில் போட்டி போட்டுக்கொண்டு இந்நாடுகள் நாளுக்கு ஒரு "புதுமை" படைத்துக்கொண்டிருக்கின்றன. நாம் வெறும் "பழமை"களை மட்டும் கதைத்து நேரத்தைச் செலவளிக்காது இங்குள்ள சாதனங்கள் மூலம் நம் அறிவை ஏன்தான் வளர்க்கக்கூடாது.
பத்திரிகைகள், நூல்கள், தொலைக்காட்சி என்று எத்தனையோ சாதனங்கள் இருக்க "இது எங்களுக்கு விளங்காது" என்று முன்கூட்டியே பிரகடனம் செய்துவிட்டு இச்சாதனங்களை ஒதுக்கிவைக்காது இவற்றினூடே எதிர்நீச்சல் போட்டு எம்மால் முயன்றளவு அறியக்கூடியவற்றை அறிய ஏன் முயலக்கூடாது. நேரமின்மை என்பது ஒரு காரணம் இல்லை என்பதல்ல; அக்கறையில்லை என்பது பொய்யுமல்ல.
உதாரணமாக நாம் வாழும் மேற்கத்தைய நாடுகளில் தலை சிறந்த செய்தித் தொடர்புச்சாதனம் "தொலைக்காட்சி என்பதில் எவரும் வேறுபட நியாயமில்லை. ஒவ்வொரு நாடும் தத்தம் அறிவு வளர்ச்சிக்கேற்ப அதிஅற்புதம் வாய்ந்த நிகழ்ச்சிகளை அளித்துக்கொண்டிருக்கும் வேளையில் நாம் "தென்னிந்தியத் திரைப்படக் கசட்டுகளுடன் மெற்றோ வண்டிகளில் கௌரவமாக வலம் வந்து கொண்டிருக்கிறோம். இற்றைக்குப் பத்து வருடங்களின் முன் நம்மவர்களில் ஒருவர் ஒரு 'வீடியோ கசட்டு'டன் போவதாயின் நெஞ்சை நிமிர்த்திக் கொண்டு போவோம். காரணம் எங்களிடம் TVயும் டெக்கும் (TV - VIDEO) உண்டு என்ற மமதை. இதேவேளை வாரத்தில் ஒன்றிரண்டு திரைப்படங்களைப் பார்ப்பதற்காக ஓர் அறையில் வாழும் நண்பர்கள்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சிலர் காசு சேர்த்து ஒரு TV யும் டெக்கும் வாடகைக்கு எடுத்து ஏறமுடியாத 7ம் 8ம் மாடிகளுக்கு 'சிலுவை சுமந்து' சென்று நண்பர்களுக்கு தொலைபேசி மூலம் அழைப்புவிட்டு 'மதிய உணவும் சில வேளை இரவு உணவும் கொடுத்து படமும் காட்டி ஓர் மகிழ்வைக் கண்டோம். தொலைக் காட்சியில் எத்தனையோ கருததைக கவரும, நாம நினைததுப்பார்த்திராத நிகழ்ச்சிகள் ஒளிபரப்பாகிக் கொண்டிருப்பது எமது கவனத்தில் படுவதில்லை. இரவு 8 - 8.30 மணிநேரச் செய்தி ஆரம்பித்ததும் TVஐ அணைத்துவிட்டு 'சமையல் பணியில் ஈடுபடுவோரும் வேறுவேறு முயற்சியில் இறங்குவோருமென்று எத்தனை அறைகளில் இப்பரிதாபக் காட்சியைக் காணக்கூடியதாக இருக்கிறது. பார்க்காமல் எப்படித்தான் விளங்கும்?பார்த்தால் தானே புரியும்?
உதாரணமாக பிரெஞ்சுத் தொலைக்காட்சியை எடுத்துக் கொள்வோம் .'பிரெஞ்'(FRENCH) எமக்குத் தெரியாத ஒரு மொழி இருந்தும் இங்குள்ளோர்க்கு இது ஒரு அத்தியாவசியமான மொழி. இதேபோல் ஒவ்வொரு நாடுகளிலும் அந்தந்த மொழிகள் இன்றியமையாதனவாகும். விளங்காது என்று நிறுத்திவிடாது விளங்கமுயற்சிப்பதே பயனுடையது. பிரெஞ்சுத் தொலைக்காட்சியில் ஆறு சேவைகள்- TF1, ANTENNE2, FR3,C+, LA5, M6.இதைவிட வயரிணைப்புகள் (CABLE) மூலம் உலகநாடுகளின் நிகழ்ச்சிகளைச் செய்மதிகளின் உதவியினால் உடனுக்குடன் பார்க்கின்றோம். இச்சேவை இன்னும் பரவலாக்கப்படவில்லை. ஏனைய சேவைகளை எந்நேரமும் பார்க்கக்கூடியதாகவுள்ளது.
பிரெஞ்சுத் தொலைக்காட்சியில், பார்த்து ரசித்த, ரசிக்கக்கூடிய பயனுள்ள நல்ல விடயங்களை அடுத்த இதழில் முடியுமானவரை தொகுத்துப்பார்ப்போமே!

- ஜனிக்ராஜ்

உங்களுக்கு!
தயக்கத்துடன் உங்கள் கதவுகளைத் தட்டினோம்.
ஆனால், இரு கரம் நீட்டி அரவணைக்கும் பரிவுடன் நீங்கள்.
நெகிழ்கின்றோம். அன்புக்குத் தலை தாழ்த்தி
உங்கள் தோள் பற்றி நிமிர்கின்றோம்.
நன்றிகள்.
தனிப்பிரதியின் விலை 15F.F(தபாற் செலவு தவிர்த்து)
- ஓசை-



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# சின்னச் சின்ன...

## தொகுப்பு : ஆர். தேவகுமார்

## Cannes Film Festival

"புது உலகக்கோட்பாடு அரசியலிலிருந்து சினிமாவுக்குள்ளும் நுழைந்து விட்டதா?" விமர்சனக் கேள்வியுடன் Cannes திரைப்படவிழா பற்றி அலசியுள்ளது ஒரு ஆங்கிலப் பத்திரிகை.

பலத்த சர்ச்சைக்கு மத்தியில் நடைபெற்று முடிந்த 44 வது இத்திரைப் படவிழாவில் அமெரிக்கத் திரைப்படமான 'Barton Bink' சிறந்த படத்திற்கான Golden Palm உயர்விருதினைப் பெற்றுள்ளது.

தொடர்ந்து மூன்றாவது தடவையாகவும் அமெரிக்கத் திரைப்படத் திற்கே உயர் விருது வழங்கப்பட்டமை குறித்து, பிரெஞ்சுப் பத்திரிகை யான 'LE MONDE' "ஏனைய பரிசில்களையும் ஏன் விட்டுவைத்தீர்கள்?" எனக்காட்டமாகக் கேட்டுள்ளது.

பிரான்சின் விழாக்காலக் கொண்டாட்டங்களை Cannes திரைப்படவி ழாவே தொடக்கி வைக்கின்றது.

பாரிஸிலிருந்து 250 K.M தொலைவில் மத்தியதரைக் கடற்கரையோரமாய் அமைந்துள்ள சிறுநகரமான Cannes என்னும் இடத்தில் இச்சர்வதேச திரைப்படவிழா நடைபெறுவதால் Cannes Film Festival என அழைக்கப் படுகின்றது.

திரைப்படத்துறை சார்ந்தோர் Cannes விழாவில் கலந்துகொள்வதும், பரிசில்களைப் பெறுவதும் தங்களுக்குக் கிடைக்கும் மிகப்பெரிய அங்கீகாரம் எனக் கருதுகின்றனர். குறிப்பாக இளம் இயக்குனர்கள் மிகுந்த உற்சாகத்துடனும், எதிர்பார்ப்புடனும் இவ்விழாவில் கலந்து கொள்வது குறிப்பிடத்தக்கது.

மக்கள் தொடர்புச் தனங்கள் அனைத்தும் இவ்விழாபற்றி அதிக அக்கறை கொள்வதும், அதனை மையப்படுத்துவதும், பாரிஸ் நகரத்தைக் கூட உற்சாகத்தில் ஆழ்த்திவருகின்றது. விழா பாரிஸ் நகரத்திலேயே நடைபெறுவது போன்ற உணர்வு ஏற்படுவதென்பது ஆச்சரியமான விடயம்தான்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அமெரிக்கப் பிரபல பாடகி Madonna விழாவில் பங்கேற்றதும், அவர் பற்றிய 'TRUTH OR DARE ' எனும் விவரணப்படம் திரையிடப்பட்டதும் விழாவின் கவர்ச்சியை மேலும் அதிகப்படுத்தியது.

Madonna பற்றிய விளம்பரங்கள் ஏற்படுத்திய அமர்க்களமும், அமெரிக்கத் திரைப்படம் மூன்று உயர் பரிசில்களைப் பெற்றுள்ளது என்ற அறிவிப்பும் Cannes நகரம் அமெரிக்காவின் கொலனியோ என்ற சந்தேகத்தை ஏற்படுத்திவிட்டதென TIME சஞ்சிகை குற்றஞ்சாட்டுகிறது.

Holly Wood தயாரிப்பாளரான Joel,Ethan Coen சகோதரர்களின் 'BARTON FINK' என்னும் நகைச்சுவை கலந்த படம், சிறந்த படம், சிறந்த இயக்கம், சிறந்த நடிகர் என மூன்று உயர் விருதுகளைப் பெற்றுள்ளது. தொடர்ந்த மூன்று வருடங்களும் அமெரிக்காவுக்குச் சிறந்த படம் என்ற உயர் விருது கிடைத்ததானது ஐரோப்பியத் திரைப்படத் தயாரிப்பில் முன்னணிவகிக்கும் பிரெஞ், ஜேர்மன், டெனிஷ் இயக்குனர்கள் தயாரிப்பாளர்கள் மத்தியில் ஏமாற்றத்தையும் சலிப்பையும் ஏற்படுத்தியுள்ளது.

Lors Von Trier என்பவர் இயக்கிய 'EUROPA' என்ற டெனிஷ் (டென்மார்க்) படம் - அரசியலை அடிப்படையாகக் கொண்டது - மிகுந்த எதிர்பார்ப்புடன் அனுப்பப்பட்டபோதும் சிறந்த தொழிநுட்பம் என்ற விருதினை மட்டும் பெற்றுக் கொண்டது.

"இரண்டு மணிநேர சிறந்த பொழுதுபோக்கை எந்தப்படம் தருகின்றதோ அதுவே சிறந்த படம்" என்ற தெரிவுக்குழுவின் தலைவர் - இயக்குனர் Roman Polanski யின் சினிமாக் கோட்பாட்டின் எதிரொலிப்பே Cannes திரைப்படவிழாவின் சர்ச்சைக்குக் காரணமெனத் திரைப்பட வட்டாரங்கள் கருதுகின்றன.

# Fete de la Music

## Fete du Cinema

கலையின் பிறப்பிடமாகக் கருதப்படுகின்ற பிரான்சில், 1982ம் ஆண்டு முதல் பிரெஞ்சுக் கலாச்சார அமைச்சினால் வருடத்தில் இரு தினங்கள் இசைக்குரிய தினமாகவும் (Fete de la Music) சினிமாவுக்குரிய தினமாகவும் (Fete du Cinema) கொண்டாடப்பட்டு வருகின்றது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இத்தினத்தில் பிரான்ஸில் முக்கிய இடங்களில் - வீதியோரங்களில், மேடைகள் அமைத்து இசை நிகழ்ச்சிகள் நடாத்தப்படுகின்றன. பிரபல பாடகர்கள், இளம்பாடகர்கள் அனைவரும் மேடையில் தோன்றிப் பாடுவர். ஒரே சமயத்தில் சகல மேடைகளிலும் - நிகழ்ச்சிகள் இரவிரவாக நடக்கும். இசை ஆர்வலர்கள் தத்தம் அயல்களில் நடக்கும் நிகழ்ச்சிகளுக்கோ அல்லது தமக்குப் பிடித்த நிகழ்ச்சிகளுக்கோ சென்று ரசித்து மகிழ்வர். இளம் கலைஞர்களை ஊக்குவிக்கும் முகமாகவும் மக்களை கலையின்பால் ஈர்த்து கலையை வளர்த்தெடுக்கும் நோக்குடனும் இத்தினம் கொண்டாடப்படுகிறது.
இதே போன்று Fete du Cinema - சினிமாவுக்குரிய தினமும் - கொண்டாடப்படுகிறது. நல்ல திரைப்படங்களை அறிமுகம் செய்வதும், சினிமாத்துறையில் மக்களை நாட்டமுறச் செய்வதும் இதன் நோக்கமாக உள்ளது. இத்தினத்தில், ஒருவர் ஒரு நுழைவுச்சீட்டுடன் அத்தினம் முழுவதும் சகல திரையரங்குகளிலும் திரைப்படங்களைப் பார்த்து மகிழலாம்.
இவ்வாண்டு ஜுன் 21, Fete de la Music ம் ஜுன் 27 Fete du Cinema வும் கொண்டாடப்பட்டன.

## நாடு கடத்தல்...?

வெளிநாட்டவரை அகதிகளை அனுப்பப் போகின்றார்கள் என்ற பீதி பரவி இருந்த வேளையில் எழுத்தாளர் ஒருவர் நாடுகடத்தப்பட்டார். மொறோக்கோ நாட்டைச் சேர்ந்த எழுத்தாளர் அப்துல்மோமன் டியோரி மொறோக்கோ நாட்டு மன்னரை அவமதிக்கும் வகையில் புத்தகம் ஒன்றை எழுதி வெளியிட்டவர் என்ற குற்றச்சாட்டே அவர் வெளியேற்றப்பட்டதற்குக் காரணமாகும்.
Who does Moroca belong to?என்ற தலைப்பில் எழுதப்பட்ட இப்புத்தகம், மொறோக்கோ மன்னரான ஹாசன்II மொறோக்கோவின் தேசிய செல்வங்களை தன்நலன்களுக்கு, தன்விருப்பப்படபயன்படுத்துகின்றார் என ஆவணங்களின் ஆதாரங்களுடன் குற்றம் சாட்டி நூலை எழுதியுள்ளார்.
ஆனால் அவ்வெழுத்தாளர் நாடுகடத்தப்பட்டது சட்டவிரோதமானது என பிரான்சின் தேசிய சபை கருதியதால், மீண்டும் பிரான்சுக்கு திருப்பி அழைக்கப்பட்டுள்ளார்.
பிரான்சின் தொடர்பு சாதனங்களின் எழுத்தாளருக்கு ஆதரவாகச் செயற்பட்டு தமது சக்தியை நிருபித்துக் கொண்டதாய் அவதானிகள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

www.tamilarangam.net

## சலமன் ருஷ்டியின் சாத்தானின் செய்யுள்கள்:

SALMON RUSHDIES SATANIC VERS - சோவியத் அதிபர் மிகைல் கோர்ப்பச்சேவ் எழுதிய 'பெரஸ்ரோய்க்கா' நூல் பரபரப்பாக விற்ப னையாகிக்கொண்டிருந்த நேரம் வெளிவந்த நாவல்.
இந்நாவல் இஸ்லாமிய அடிப்படைவாதிகளின் கண்டனத்துக்குள்ளா னதும், ஈரானின் மதத்தலைவரான ஆயத்துல்லா கொமேய்னி நாவலா சிரியர்- சலமன்ருஷ்டிக்கு மரணதண்டனை விதித்திருந்தும் யாவரும் அறிந்ததே.
தலைமறைவாகி வாழ்ந்துவரும் ருஷ்டி, கடந்த வருடம் தனது நாவல் பற்றி மன்னிப்புக் கோரியிருந்தபோதும், இஸ்லாமிய அடிப்படை வாத விமர்சகர்களால் ஏற்றுக்கொள்ளப்படவில்லை.
அண்மையில் இந்நாவலை மொழி பெயர்த்த காரணத்திற்காக இத்தா லிய மொழி பெயர்ப்பாளரான Ettore Capriolo மிலான் நகரில் வைத்துக் கொலை செய்யப்பட்டுள்ளார். இதே போன்று யப்பானிய மொழிபெ யர்ப்பாளரான Hitoshi Igrashi டோக்கியோவில் வைத்துக் கொலை செய்யப்பட்டுள்ளார்.

## பாரிஸ் விளம்பரப் பலகைகளில் வறுமையின் கோரம்!



மனித உறுப்புகள் விற்கப்படுகின்றன!
அருகிலுள்ள படம். L'Evenement பிரெஞ்சுச் சஞ் சிகையொன்றின் (ஜுலை 18 -24) அட்டைப்படம்.
சஞ்சிகை விளம்பரத்திற்காக பாரிஸ் விளம்பரப் பலகைகளில் ஒட்டப்பட்டிருக்கிறது.
தமிழ்நாடு வில்லிவாக்கம் பகுதியைச் சேர்ந்த இந்த இளம்பெண் துளசி (வயது29) வறுமையின் கோரத்திற்கு தன் சிறுநீரகமொன்றை விலையாக் கியிருக்கிறாள்.
இவள் கணவனும் (தியாகராஜா. வயது43)வறு மையுடன் போராடமுடியாது ஏற்கனவே சிறுநீர கமொன்றை விற்றிருந்தவன், தற்சமயம் கண் ஒன்றை விற்க இருக்கிறான்.

www.tamilarangam.net

நெல்லை க. பேரன் நினைவாக...

# குத்துவிளக்கு

விழுதுகள் பரப்பிநின்ற
விருட்சமொன்று
சாய்ந்து விட்டது,

ஆதிக்கப் புயலின்
'ஷெல்'லடியில் சிக்கி
அடியோடு சாய்ந்த
ஆலவிருட்சம் பேரன்,

இலக்கிய நெஞ்சங்கள்
எல்லோர்க்கும்
இனிய சர்க்கரை அவன்,

எந்த இலக்கியக் கூட்டத்திலும்
முன்னிருக்கும்
குத்துவிளக்கு அவன்,

சிறுகதை, நாவல்
கட்டுரை, கவிதை
அத்தனையிலும்
அவன் கைவண்ணம்,

நினைவுகள் சாவதில்லை
பேரன் படைப்புக்கள்
வாழ வைக்கும்.

- வி. ரி. இளங்கோவன்

www.tamilarangam.net

## மரபும் புதுமையும்: ஒரு உதாரணம்

# நாட்டார் பாடல் வடிவில் நல்லதொரு கவிதை

சி. சிவசேகரம்

அண்மையில் எழுதிய கட்டுரையொன்றில் மரபின் படிமங்களைச் சமகால இலக்கியம் எவ்வாறு பயன்படுத்தியுள்ளது என்பது பற்றிச் சிறிது எழுதியிருந்தேன். பழைய பாடல்களைத் தழுவிச் சமகால நிலைமைகளைப் பற்றிய ஆக்கங்களைச் சமகாலத்தமிழின் தலைசிறந்த கவிஞர் பாரதியும் எழுதினார். அவர் நாடகப் பாடல்களையும் நாட்டார் பாடல்களையும் தழுவிக் கிண்டலுக்காகவும் கனமான கருத்துக்களைக் கூறுவதற்காகவுமான கவிதைகளை வழங்கியிருக்கிறார் என நாம் அறிவோம்.

ஈழத்துக் கவிஞர்கள் சிலரும் இவ்வாறான முயற்சிகளில் இறங்கி நல்ல படைப்புக்களை வழங்கியுள்ளனர். இவ்வாறான படைப்புக்களில் என் மனதை மிகவும் கவர்ந்த கவிதையாக்கம் சண்முகம் சிவலிங்கம் எழுதிய "ஆக்காண்டி".

ஆக்காண்டி என்பது ஆள்காட்டி குருவிக்கு மட்டக்களப்பில் வழங்கும் பேர்.

ஆக்காண்டி பற்றிய மட்டக்களப்பு நாட்டார் பாடல் இது!

ஆக்காண்டி ஆக்காண்டி எங்கெங்கே முட்டை வைத்தாய்?
கல்லைப் பிளந்து கடலருகே முட்டை வைத்தேன்;
வைத்ததுவோ நாலு முட்டை பொரித்ததுவோ மூணு குஞ்சு;
மூத்த குஞ்சுக் கிரை தேடி மூணு மலை சுத்தி வந்தேன்;
இளைய குஞ்சுக் கிரை தேடி ஏழு மலை சுத்தி வந்தேன்;
பாத்த குஞ்சுக் கிரை தேடி பவளமலை சுத்தி வந்தேன்;
மாயக் குறத்தி மகன் வழிமறித்துக் கண்ணி வைத்தான்,
காலிரண்டும் கண்ணியிலே சிறகிரண்டும் மாரடிக்க
நானழுத கண்ணீரும் என் குஞ்சழுத கண்ணீரும்
வாய்க்கால் நிரப்பி வழிப்போக்கர் கால்கழுவி
இஞ்சிக்குப் பாய்ந்திடத்தே இலாமிச்சை வேரூண்டி,
மஞ்சளுக்குப் பாய்ந்திடத்தே மாதாளை வேரூண்டி,
தாழைக்குப் பாய்ந்திடத்தே வற்றினது காணீரே.

அன்றாட வாழ்வில் வறுமையையும் இன்னலையும் பற்றிய ஒரு சோகக் கதையை ஒரு பறவையின் துன்பத்தின் கதையைக் கூறும் பாடல் இது.

www.tamilarangam.net

காலப்போக்கில் அதன் கருத்தாழம் பற்றிய கணிப்பின்றி ஒரு பொழுதுபோக்குப் பாடலாக இசைக்கும் நிலை ஏற்பட்டுவிட்டது. 'ஆக்காண்டி' என்ற நாட்டார் பாடல் இலங்கைக் கல்வித் திணைக்களம் வெளியிட்ட சிறுவர்கட்கான தமிழ்ப்பாடநூல் ஒன்றில் 1970களில் சேர்க்கப்பட்டிருந்ததாக நினைவு.
அந்தப் பாடலில், எளிமையானதாயினும், வலிமையான சந்தம் உண்டு. அழகான கற்பனை வளம் உண்டு. இந்தப் பாடலைச் சமகாலத்துக்கு எப்படிப் பொருத்த முடியும் என்று பலரும் பலவிதமாகச் சிந்திக்க இடமுண்டு.
சண்முகம் சிவலிங்கத்தின் கைவண்ணத்தை கீழே காண்க.

ஆக்காண்டி,ஆக்காண்டி எங்கெங்கே முட்டை வைத்தாய்?
கல்லைக் குடைந்து கடலோரம் முட்டை வைத்தேன்.

வைத்ததுவோ ஐஞ்சு முட்டை பொரித்ததுவோ நாலு குஞ்சு
நாலு குஞ்சுக் கிரை தேடி நாலு மலை சுற்றி வந்தேன்,
மூன்று குஞ்சுக் கிரைதேடி மூவுலகம் சுற்றி வந்தேன்.

ஆக்காண்டி, ஆக்காண்டி எங்கெங்கே முட்டை வைத்தாய்?
கல்லைக் குடைந்து கடலோரம் முட்டை வைத்தேன்.

குஞ்சு பசியோடு கூட்டில் கிடந்ததென்று
இன்னும் இரை தேடி ஏழுலகும் சுற்றி வந்தேன்.
கடலை இறைத்துக் கடல் மடியை முத்தமிட்டேன்.
வயலை உழுது வயல் மடியை முத்தமிட்டேன்.
கடலிலே கண்டதெல்லாம் கைக்கு வரவில்லை.
வயலிலே கண்டதெல்லாம் மடிக்கு வரவில்லை.
கண்ணீர் உகுத்தேன் கடல் உப்பாய் மாறியதே.
விம்மி அழுதேன் மலைகள் வெடித்தனவே.

ஆக்காண்டி, ஆக்காண்டி எங்கெங்கே முட்டை வைத்தாய்?
கல்லைக் குடைந்து கடலோரம் முட்டை வைத்தேன்.

வண்டில்கள் ஓட்டி மனிதர்க் குழைத்து வந்தேன்.
கையால் பிடித்துக் கரைவலையை நானிழுத்தேன்.
கொல்லன் உலையைக் கொழுத்தி இரும்படித்தேன்.
நெய்யும் தறியிலே நின்று சமர் செய்தேன்.
சீலை கழுவி சிகையும் அலங்கரித்தேன்.
வீதி சமைத்தேன் விண்வெளியில் செல்வதற்குப்
பாதை சமைக்கும் பணியும் பல புரிந்தேன்.
ஆனாலும் குஞ்சுக்கு அரை வயிறு போதவில்லை.
காதல் உருகக் கதறி அழுது நின்றேன்.
கதறி அழுகையிலே கடல் இரத்தம் ஆயினதே.
விம்மி அழுகையில் வீடெல்லாம் பற்றியதே.
கடல் இரத்தம் ஆகுமென்று கதறி அழவில்லை.
வீடுகள் பற்றுமென்று விம்மியழுவில்லை.

www.tamilarangam.net

**ஆக்காண்டி, ஆக்காண்டி எங்கெங்கு முட்டை வைத்தாய்?**
**கல்லைக் குடைந்து கடலோரம் முட்டை வைத்தேன்.**

குஞ்சு வளர்ந்தும் குடல் சுருங்கி நின்றார்கள்.
பசியைத் தணிக்கப் பலகதைகள் சொல்லி வந்தேன்.
கடலை இறைத்துக் களைத்த கதை சொல்லி வந்தேன்.
வயலை உழுது மடிந்த கதை சொல்லி வந்தேன்.
கொல்லன் உலையும் கொடுந் தொழிற் சாலையதும்
எல்லா இடமும் இளைத்த கதை சொல்லி வந்தேன்.
சொல்லி முடிவதற்குள் துடித்தே எழுந்து விட்டார்-
பொல்லாத கோபங்கள் பொங்கி வரப் பேசுகின்றார்:
"கடலும் நமதன்னை கழனியும் நமதன்னை
கொல்லன் உலையும் கொடுந் தொழிற்சாலையதும்
எல்லாம் நமது" என்றார் எழுந்து தடி எடுத்தார்.
கத்தி எடுத்தார் கடப்பாரையும் எடுத்தார்
யுத்தம் எனச் சென்றார் யுகம் மாறும் என்றுரைத்தார்.
எங்கும் புயலும் எரிமலையும் பொங்கி வரச்
சென்றவரைக் காணேன் செத்து மடிந்தாரோ?

**வைத்ததுவோ ஐஞ்சு முட்டை பொரித்ததுவோ நாலு குஞ்சு**
**நாலு குஞ்சும் போர் புரிய நடந்துவிட்டார் என்ன செய்வேன்**
**ஆனவரைக்கும், அந்த மலைக் கப்பாலே**
**போனவரைக் காணேன், போனவரைக் காண்கிலனே.**

**ஆக்காண்டி, ஆக்காண்டி எங்கெங்கே முட்டை வைத்தாய்?**
**கல்லைக் குடைந்து கடலோரம் முட்டை வைத்தேன்.**

ஆக்காண்டி பற்றிய நாட்டார் பாடலின் மூலவடிவம் எதுவென்று சொல்லமுடியாது. பல நாட்டார் பாடல்களிற் போன்று இதிலும் பாடபேதம் உண்டு. சண்முகம் சிவலிங்கத்தின் ஆக்காண்டிக்கு ஐந்து முட்டை என்பதோ ஆக்காண்டி மூணுமலை சுற்றியதோ மூவுலகம் சுற்றியதோ என்பதோ இவ்வாறான பாடபேதங்களுடன் சேர்ந்தாகவும் இருக்கக்கூடும். இதுபற்றி மட்டக்களப்பு நாட்டார் பாடல் பற்றிய ஞானமுள்ளோரே விளக்கமுடியும்.
ஆயினும் சண்முகம் சிவலுங்கத்தின் ஆக்காண்டிக்கும் நாட்டார் பாடலின் ஆக்காண்டிக்குள் உள்ள ஒற்றுமை உழைத்து நலிந்த பறவை பற்றியது என்ற அளவுடன் நின்று விடுகிறது. சண்முகம் சிவலிங்கத்தின் ஆக்காண்டியின் நிர்க்கதியான நிலையை அதன் குஞ்சுகள் பகிர ஆயத்தமாக இல்லை. அவை தம் உரிமை பற்றிய உணர்வு மிகுந்த குஞ்சுகள். தாயின் நிராதரவான நிலை கண்டு கொதித்தெழுந்து நீதிக்காகப் போராடும் குஞ்சுகள். உழைப்போருக்கே ஆலை சொந்தம் உழுவோருக்கே நிலம் சொந்தம் என்று பிரகடனம் செய்யும் புதிய பரம்பரை.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நாட்டார் பாடலின் சந்தத்தில் ஓசைநயம் பிசகாமல் எழுதப்பட்ட சண்முகம் சிவலிங்கத்தின் ஆக்காண்டியை வாய்விட்டுப் படிக்கும் போது நாட்டார் பாடலின் சோகத்தின் தொனி மெல்ல மெல்ல மாறி வேகமும் துடிப்பும் மிக்க ஒன்றாக மாறிவிடுகிறது. இது ஒரு தேர்ந்த கவிஞரின் சொல்லாற்றலின் வலிமை. ஓசைநயம் வேண்டி அவசியமற்று ஒரு சொல்லும் திணிக்கப்படாத அற்புதமான கவிச்சித்திரம். இதே தொனியில் இன்னும் நாலுபக்கம் அவர் எழுதிச் சென்றாலும் அலுப்புத் தட்டாத வீறுமிக்க நடை. இது கவிதை வீச்சு.

ஒரு கண்ணீர்க் கதையை ஒரு போராட்டக் கவிதையாக்கிய இந்த முயற்சியில் சண்முகம் சிவலிங்கம் மூலத்தின் தன்மைக்கு உடன்பாடாகவே செயற்பட்டுள்ளார். ஆக்காண்டித் தாய்க்குருவி போராடத் திராணியற்று ஒடுக்கப்பட்டு அழுந்திமனம் புழுங்கும் ஒரு ஜீவனாகவே கவிதையின் இறுதி வரிகளிலும் காட்டப்படுகிறது. தன் கண்ணீரால் கடல் இரத்தமாயினது பற்றியும் அழுகையின் குமுறலில் வீடுபற்றி வேகியது பற்றியும் தன் பிள்ளைகள் போராடப் போனது பற்றியும் ஆக்காண்டியால் வருந்தவும் ஏங்கவுமே முடிகிறது.

சண்முகம் சிவலிங்கத்தின் கவிதை போராட்டம் வெல்லுமா தோற்குமா என்றோ குஞ்சுகளுக்கு என்ன நடக்கும் என்றோ கூறமுனையவில்லை. இதை இன்னொரு கவிஞர் இனொருவிதமாகக் கையாண்டிருக்கலாம். ஆனால் எத்தனை பேரால் சண்முகம் சிவலிங்கத்தின் கைத்திறனுடன் ஒரு பழைய பாடலில் ஒரு புதிய சூழ்நிலையை இவ்வளவு அழகாகப் பொருத்திக் காட்டமுடியும்?

[redacted]

ஈழத்து இலக்கியப் பரப்பில், சிறுகதை மூலவர்களுள் ஒருவரெனச் சிறப்பித்துக் கூறப்படும் சி. வைத்திலிங்கம் அவர்கள் அண்மையில் லண்டனில் காலமானார்.
நீண்டகாலமாக அவர் எதனையும் எழுதமுடியாதிருந்தபோதும், அவரது எழுத்துக்கள் இலக்கியத்தளத்திற் சுவடுகளைப் பதித்துள்ளன.
மறைந்த மூத்த எழுத்தாளருக்கு 'ஓசை' சிறு இதழின் அஞ்சலிகள்!

- ஓசை-

[redacted]



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சிறுகதை — பிரபா மணாளன்

# ஆடைகள் வாங்குவதற்காக

சற்றுத்தள்ளிப் புரண்டு படுத்தான் அவன். பக்கத்தில் படுத்திருந்த அவள்மீது பார்வையைப் படரவிட்டான். சிறிது முன்னால் உணர்ச்சிக் கொந்தளிப்பில் நடந்து முடிந்த சதைத்தேவைப் பூர்த்தி அவள் முகத்தில் வியர்வை முத்துக்களைப் பரப்பியிருந்தது. வழக்கம் போலவே இழைபிரிந்த மயிர்க்கொத்தொன்று அவள் நெற்றியில் சுருண்டிருந்தது. வார்த்தைகளுக்குள் அகப்படாத ஒரு வசீகரம் அவளது முகத்தில் எப்போதும் காணப்படுகிறது என்ற தனது கருத்தை இப்போதும் அவன் ஊர்ஜிதம் செய்து கொண்டான். இந்த வசீகரம்தான் தன்னை அவளிடம் இழுத்துவருகிறது என்ற நண்பர்களின் கூற்று உண்மைதானோ எனப் பேதலித்துக்கொண்ட மனதை சமாதானப்படுத்தவாவது இன்று தனது கேள்விகளை அவளிடம் இறக்கிவைத்துவிடுவதென முடிவு கட்டினான். இப்படி எத்தனை தரம் முடிவு செய்திருக்கிறேன் என நினைத்துக்கொண்டபோது சிரிப்பு வந்தது."சரி தான் சிரிக்கவும் முகட்டை வெறிக்கவும் தொடங்கியாச்சா?" என்ற அவளது கேள்விக்கு ஏதும் பதிலளிக்காமல் சிகரெட் ஒன்றை பற்றவைத்துக் கொண்டான். நுரையீரல்களுக்குள் நிரம்பிய புகையின் சுவையை கண்களை மூடிரசித்தவன் அந்த சுகானுபவத்தை இழக்கவிரும்பாமல் மெதுவாக அதை வெளியேற்றினான். அவனையும் அவனது இந்த மோனத் தவத்தையும் பார்த்து திடீரென ஏதோ நினைவுக்கு வந்தவளாக சிரித்துக்கொண்ட போது அவன் கண்களைத் திறந்தான். கலைந்திருந்த அவள் ஆடையையும் முகவசீகரத்தையும் மீறி அவளது சிரிப்பு அவனைத் தாக்கவே கண்களை இடுக்கி"ஏன் சிரிக்கிறாய்?" எனக் கேட்டான்.

"இன்னும் கூடுதலாக உங்களை முகட்டை வெறிக்கச் செய்யலாமா என யோசிக்கிறேன்" என்றபடி அவள் ஆடையைச் சரிசெய்து கொண்டாள் ."எப்படி? எப்படி?" என்ற அவனது கேள்வியில் இவள் ஏதோ புதிதாகச் சொல்லப்போகிறாள் என்ற எதிர்பார்ப்பு இருந்தது.

இவளைப் பற்றிய எனது எதிர்பார்ப்புகள் என்றும் பொய்யாவதில்லை என அவன் நினைத்துக் கொண்டபோது அவள் சொன்னாள்.......

"இதோ இப்போது கண்களை மூடி ஏதோ மகத்தான தியானமாக இந்த சிகரெட்டை ரசித்தீர்களே இந்தச்சுகமும் சற்று முன் நீங்கள் என்னால் பெற்றசுகமும் இவைகள் இல்லா விட்டால் நீங்கள் எப்படி இருப்பீர்கள் என எப்போதாவது நினைத்திருக்கிறீர்களா?" கேட்டுக்கொண்டே அவள் எழுந்து வெளியே போனாள்.

அவனால் அவளது கேள்வியின் தோரணையை ஜீரணிக்கமுடியவில்லை. இவள் எப்போதுமே இப்படித்தான். நேராகவும் முகத்திலடித்தாற் போலும் ஏதாவது சொல்லிவிடுவாள். அந்தப் பிரச்சினையிலேயே



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஆழ்ந்து அதையேபேசி அவளது வாதங்களைக் கேட்டுக்கொண்டு போகவேண்டியதுதான். அவளது கேள்விகளைக் கேட்கவே நேரம் கிடைப்பதில்லை. இன்றும் அப்படி ஆகிவிடக்கூடாது என்பதில் அவன் தீர்மானமாக இருந்ததால், அவளுக்குப் பதிலையும் அடுத்த தனது கேள்வியையும் தனக்குள் ஆயத்தப்படுத்திக் கொண்டான்.

"முகடு என்ன சொல்லுகிறது?" எனக் கேட்டுக்கொண்டு அறைக்குள் வந்தவள் கட்டிலில் கால்களை மடக்கிக்கொண்டு அவளையே நேராக பார்த்துக்கொண்டிருந்த அவனைக் கண்டதும் விழிகள் வியப்பால் விரிய "ம் ம்"என்று முனகினாள். இவன் இன்று வழமை போல் இல்லை என்பது புரிந்துகொண்டதால் எப்படி இது சாத்தியமாயிற்று என்ற கேள்வியோடு கட்டிலுக்கெதிரே கால்களைக் கட்டிக்கொண்டு உட்கார்ந்தவள் சொல்லுங்கள் என்பதுபோல் அவனை நிமிர்ந்து நோக்கினாள்.

"இவ்வளவு நாளாக என்னை நீ புரிந்துகொண்டது இப்படித்தானா? இவற்றைவிடவும் எனது உலகம் பரந்தது. இன்னும் எத்தனையோ சிந்தனைகளில், லயிப்புக்களில் ஏன் வித்தியாசமான கருத்துக்களில் நான் திளைத்திருக்கிறேன். சொல்லப்போனால் அவைதான் என் உலகம், அதுதான் என் வாழ்க்கை. அந்த இறுக்கத்திற்கு நான் தேடும் ஓய்வு.... நோ. ரிலாக்ஸ்தான் நீ" சற்று மூச்சுவாங்கி சிகரெட்டை ஒரு இழுப்பு இழுத்தவன் தொடர்ந்தான். "இவ்வளவும் சொல்லுகின்ற நீ உன்னைப் பொறுத்தவரை எப்படியிருக்கிறாய்?" "கசங்கிய உன் படுக்கை விரிப்பை அடுத்தவனுக்காகச் சரிசெய்து ஒழுங்காக்கும் இந்தவேலை உனக்கு போரடிக்கவில்லையா?" "என்றாவது இது வேண்டாம் ஒழுங் காக வாழ்வோமென நீ சிந்தித்ததுண்டா?" இந்த வாழ்க்கையை விட்டுவிட உன்னால் முடியுமா?"

அவள் மெதுவாக தலையைக் குலுக்கிக் கொண்டாள். அவள் நினைத்த புதிய மாற்றம் இவனில் இன்னும் இல்லை. ஆனால் எல்லோரும் சொல்லுகின்ற ஒன்றை இன்றுதான் இவன் சொல்லியிருக்கிறான். அவனைப் பொறுத்தவரை இன்று வழமையில்லைத்தான். அவளுக்கோ இது கேட்டுக் கேட்டுப் புளித்துப் போன ஒன்று. இருந்தாலும் சொல பவன் இவனாகையால் இதற்குப் பதில் சொல்லியாகவேண்டும் அதுவும் இவனுக்குப் புரிகிற மாதிரி. எல்லோருக்கும் சொல்வதுபோல் நான் இந்தத் தொழிலை விட்டுவிடுகிறேன். நீ என்னை ஏற்றுக்கொள்வாயா என்று கேட்டால் வீம்புக்காவது தன்னைப்பற்றிய ஒரு இமேஜிக்காவது இவன் ஒத்துக்கொள்ளக்கூடும். இவனுடைய வட்டத்தில் என்னைப் போன்ற ஒருத்தியை மணம்முடிப்பது உலகமகாபுரட்சியாகக் கருதப்ப டக்கூடும். ஆனால் அதனோடு எல்லாம் முடிந்துவிடுகிறது என இவன் நினைத்துவிடக்கூடாது. தனது இலட்சியக் கற்பனைகளிலிருந்து இவன் யதார்த்தத்துக்கு வரவேண்டும்.

ஒரு நீண்ட விவாதத்திற்கு தன்னைத் தயார் செய்து கொண்டவளாக அவள் மெதுவான குரலில் ஆரம்பித்தாள். "நீங்கள் ஜெயகாந்தன்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

எழுதிய "இலக்கண்ம மீறிய கவிதை " வாசித்திருக்கிறீர்களா?" கேள்வி யோடு நிறுத்தி அவனைப் பார்த்தவள் அவன் வாசிக்கவில்லையெனத் தெரிந்துகொண்டு தொடர்ந்தாள். " அதில் ஓரிடத்தில் அவர் சொல்லு கிறார் அவளது தலையிலுள்ள மல்லிகை கசங்காவிட்டால் அன்று முழுவதும் அவள் பட்டினி என்று அர்த்தம் புரிகிறதா உங்களுக்கு? நீங்கள் சொன்னீர்களே இந்தப் படுக்கைவிரிப்பை ஒருவனுக்காவது தட்டிப்போடாவிட்டால் நான் வயிற்றைக் காயப்போடவேண்டியது தான். இந்நதத் தொழிலை நான் விட்டுவிடமுடியாதிருப்பதும், இந்தத் தொழிலுக்கு நான் வந்ததும் ஒரே காரணத்துக்காகத்தான். வாழுவ தற்கு. இதற்கு நான் வெட்கப்பட்டதேயில்லை. ஏனென்றால் இதற்கு வெட்கப்படவேண்டியது இந்தச்சமூகம். அதுவே வெட்கப்படாமல் என்னிடம் வருகிறது என்கிறபோதுதான் மாறவேண்டியவள் நானல்ல இந்தச் சமூக அமைப்புத்தான் என்பது எனக்குத் தெரிகிறது. அதை ஏற்படுத்தாமல் நீங்கள் சொன்னபடி ஒழுங்காக வாழுவோமென்று நான் முடிவுகட்டிய பிறகு என்ன புதிதாகச் செய்யப் போகிறேன்.

சிகரெட்டை வாயிலிருந்து எடுத்தபடியே அவன் பேசினான். "நீளமாகத் தான் பேசுகிறாய். இந்தப் பேச்சினால் உன்னை நியாயப்படுத்திக் கொள்ளப் பார்க்கிறாய் இந்தச் சமூகத்தின் மீது பழியைப் போடுவதை விட ஏன் நீ திருந்தக்கூடாது?. திருந்திவிட்ட உன்னைப் போன்றவர் களை ஏற்றுக்கொள்ளும் பக்குவம் எத்தனையோ பேருக்கு இருக்கிறது என்பது உனக்குத் தெரியுமா?" மேற்கொண்டும் அவனைப் பேசவிடாது போதும் நிறுத்துங்கள் என்பதுபோல அவள் கைகாட்டினாள்". திருந்தி விடுவது திருந்தி வாழ்வது என்று நீங்கள் சொல்லுவது என்ன? ஒவ் வொருவனுக்கும் படுக்கை விரிப்பைத் தட்டிப்போடாமல் ஒருவனுக்கு மட்டும் தட்டிப்போட்டுக் கொண்டு இவனோடு மட்டும்தான் விபச்சா ரம்....ஓ ஸோரி அப்போது அதற்குப் பெயர் என்ன - சரி......படுத்து எழும்புகிறேன் என்று சமூகத்துக்கு ஊர்ஜிதப்படுத்திக் கொண்டு அதற்குச் சாட்சியாக குழந்தைகளை சுமந்து ஒரு விசுவாசமிக்க வேலைக்காரியாக நான் இருக்கவேண்டும். ஸோ திரும்பவும் ஒரு அடிமையாக - அங்கீகரிக்கப்பட்ட அடிமையாக. சொல்லுங்கள் இந்த சமூகத்தில் அடிமையாக இருப்பதற்குக்கூட ஒரு அங்கீகாரம் தேவையா?" கோபத்தோடு முகம் சிவந்து ஒரு விரலை நீட்டிக்காட்டி யபடி எழுந்து நிற்கின்ற அவளை அவன் நிமிர்ந்து பார்த்தான்.

"நீயேன் இப்படி உணர்ச்சிவசப்படுகிறாய் என்று எனக்குப் புரிய வில்லை". "ஒரு நல்ல மனைவியாக வாழுவதை இப்படிக் கொச்சைப் படுத்துவது கொஞ்சம் கூடச் சரியில்லை. இத்தனைக்கும் பிறகு உன்னை ஒருவன் ஏற்றுக்கொள்வதே பெரிய விஷயம். அதற்குப் பிறகும் நீ இவையெல்லாம் மாற்றமில்லை என்று சொல்லுகிறாயென் றால்" நிறுத்தியவன் சற்றுத் தயங்கிக் கேட்டான்"இந்த வாழ்க்கையை அந்தளவு நீ ரசிக்கிறாய் என நான் கருதிக்கொள்ளலாமா?"அவன் எதிர்பார்த்ததிற்கு மாறாக அவள் வாய்விட்டுச் சிரித்தாள்."இப்போது



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நீங்கள் சொல்லுகிறீர்களே இதுதான் கொச்சைத்தனம். நான் சொன்ன உண்மைகளை ஏற்றுக்கொள்ளமுடியாத உங்கள் ஈகோவின் கொச்சைத்தனம். நல்ல மனைவி என்பதற்கு இந்தச் சமூகத்தின் வரைவிலக்கணம் என்ன ? உங்களுடைய மனைவி ஒரு நல்ல மனைவி தானே" அவனுடைய நெற்றிச் சுருக்கத்தையும் முகமாற்றத்தையும் அவதானித்தவள் தொடர்ந்தாள். "மன்னியுங்கள் எனக்கு வேறுவழி தெரியவில்லை. இப்போது அவள் நிலை என்ன? நீங்கள் அவளை எப்படி வைத்திருக்கிறீர்கள்?" கோபத்தோடு அவன் குறுக்கிட்டான். "அவளுக்கு எந்தக்குறையும் இல்லாமல் வைத்திருக்கிறேன் சொல்லப்போனால் நான் உன்னிடம் வருவதுகூடத் தெரியும். அப்படி ஒரு அண்டர்ஸ்டாண்டிங் உள்ளவள் அவள்".

"சரி . ஆனால் இதை அண்டர்ஸ்டாண்டிங் என்று எப்படிச் சொல்லுகிறீர்கள்?. உங்களைக் கட்டுப்படுத்தும் அதிகாரத்தை அவளுக்குக் கொடுத்திருக்கிறீர்களா? நோ.....குறுக்கிடாதீர்கள். அவள் எதுவும் பேசாமலிருக்கிறாள் என்பதாலேயே இதை ஏற்றுக்கொள்ளுகிறாள் என்று அர்த்தமில்லை. நீங்கள் திரும்பிப்போகும்போது உங்களுக்குச் சமைத்துவைத்து அவள் காத்துக்கொண்டிருப்பாள். நாளையும் நாளை மறுநாளும் இப்படியே தொடர்ந்து. உங்கள் ரிலாக்ஸ் சரி. ஆனால் அவளுக்கு? அவள் உணர்வுகளுக்கு என்ன மதிப்பு? என்றைக்கேனும் இப்படி உங்கள் மனைவி பேசினால் அதற்குப் பிறகும் அவளை நல்ல மனவி என்று சொல்ல நீங்கள் தயாரா?"

அவன் குழம்பிப்போனான். இன்றைக்கு இவள் சொல்லுபவைகள் எவ்வளவு சரியாக இருக்கின்றன. இப்படி ஒருநாளும் எனது மனைவி பேசவில்லை என்பது உண்மைதான். அப்படியானால் இவள் சொல்வதுபோல் அதனால்தான் அவளை நான் ஏற்றுக்கொள்ளுகின்றேனோ? தனது மனைவியை மனக்கண்முன் கொண்டுவந்து இவளைப் போல் எதிர்நிறுத்திக் கற்பனை செய்து பார்த்து அந்த உண்மையின் வேகம் தாங்காமல் அவன் தலையை உலுக்கிக்கொண்டான்.

அவனது சிந்தனையையும் அதன் போக்கையும், புரிந்துகொண்டவள் போல் அவள் சற்றுப்புன்னகைத்தாள். "இப்போது நீங்கள் நினைக்கிறீர்களே இதுதான் உண்மை. என்னைப் போல் ஒருத்திக்கு வாழ்வு கொடுப்பதற்கு முதல் உங்கள் மனைவிக்கு வாழ்வு கொடுத்திருக்கிறீர்களா எனச் சிந்தியுங்கள். அந்த ஒன்றையாவது முதலில் புரிந்துகொள்ளுங்கள்." அவனால் இன்னமும் ஒரு முடிவுக்கு வரமுடியாமல் இருந்தாலும் ஏதோ ஒன்று புதிதாக தன்னுள் விளைந்திருப்பது போல் தெரிந்தது. இன்றைக்கு இது போதும் இப்போதே வீட்டுக்குப் போய் விடவேண்டும் என்று நினைத்துக்கொண்டவனாக அவன் எழுந்தான்.

"இருங்கள் இதோ வந்துவிட்டேன்" என அவள் வெளியே போய் ஒரு புத்தகத்துடன் திரும்பி வந்தாள் தனக்கு முன் அவள் பிரித்துக் காட்டிய வரிகளை அவன் வாசித்தான்."நாங்கள் நிர்வாணத்தை விற்பனை செய்கின்றோம் ஆடைகள் வாங்குவதற்காக"நிமிர்ந்து அவளைப்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பார்த்தான்."கேட்டீர்களே இந்த வாழ்க்கையை ரசிக்கிறேனா என்று". இதுதான். இது ரசிப்பு இல்லை. யதார்த்தம். ஆனால் இந்த வாழ்க்கை நீங்கள் சொல்வது போல் யாரோ ஒருவன் ஏற்றுக் கொள்வதால் முடிந்துவிடப்போவதில்லை. என்னைப் போன்ற எல்லோருக்கும் ஆடைகள் மட்டுமல்ல அமைப்பிலும் மாற்றம் வேண்டும். அதுவரைக் கும் நான் ....இல்லை நாங்கள் இதைச் சொல்லிக்கொண்டு தான் இருப்போம்" அவள் சொல்லி முடித்துவிட்டு கட்டிலில் அமர அவன் குனிந்து தனது செருப்பை தேடி அணிந்துகொண்டான்.

## அடுத்த இதழில்......
## ஓவியமும் தேடலும் -3





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# கி. பி. அரவிந்தன் கவிதைகள்

நிழலும்
குறுகிக் கரையும்.
பார்வை தாழ
நெஞ்சுக்குள் கூசும்.
கறுப்பிலும்
மாற்றுக் குறைந்த
என்னை
பூனைக் கண்கள்
உரிக்கும்.
எலும்பு மச்சைக்குள்ளும்
துழாவும்.
இரத்தம்
கறுப்பாய் இல்லையோ....?
இகழ்ச்சி கொப்பளிக்கும்.

ஆபிரிக்காவுக்கு
தெற்கே தான் நரகமாம்.
நரக வெக்கையில்
கறுத்தவர்கள்
தங்கள் வலையத்துள்
நுழைவதோவாம்...

நரகத்தின்
வாசல் தாண்டி
வாஸ்கொடகாமா
பயணித்ததனால் தானே
குளிர் வலயத்தில்
சொர்க்கம் எழுந்தது.

யாருக்கு வேண்டும்
உனது சொர்க்கம்
தட்டிப் பறிப்பதற்காய்
நான் வரவில்லை.
எங்கள் சொர்க்கத்தை
தட்டிப் பறித்தவர்கள்
நீங்களே என்பதும்
எப்போதும் மறவேன்.

நீர் உறிஞ்சி
மண்ணில் வேர் பிடித்து,
கனிதரும் நிழல்தரும்
மரமாகி.,
விதை பரப்பி.,
தோப்பாகு முன்னால்
வேரடி மண்ணுடன்
வீழ்த்தப்பட்டேன்.
நற்கனிகொடாத மரமென்றோ
உறைபனியில் வீசப்பட்டேன்
குண்டி மண்ணையும்
தட்டி விட்டாயிற்று.

ஆணிவேரில் ஒட்டியவையுமா?

சாதிய வெக்கையிலும்
வேகாத உயிர்.
நிறவெக்கையிலா வேகும்.
அந்நியன்
எங்கே, எப்போது
நேசிக்கப்பட்டான்.
இருநூறு முன்நூறு
ஆண்டுகள்
நாங்கள்
உன்னை பொறுத்திருந்தோமே..?
கொஞ்சம் பொறு.
நிழலும்
குறுகிக் கரைய
நெஞ்சுக்குள் கூச
பனியில் உறைந்திருக்கிறேன்...
16-10-90 ஜேர்மனி.



www.tamilarangam.net

பனிப்பாளமும்
உருகும் நேரம்.
மாறும் பருவம்.
துருவ வடக்கு
இனித் துலங்கும்.
பகலின் நீட்சி.
ஆடைகளைந்த
நிர்வாண மென்மைகள்.

ஓடுடைத்த
கூட்டுப்புழுக்கள்.
எங்கெங்கும் பூக்கள்.
வண்ணத்துப் பூச்சிகள்
சிறகடிக்கும்
கடைக்கண் எறியும்
கும்மாளந்தான்.

இருளினுள் தென் துருவம்.
தெற்கே தான் என் தேசம்.
நீலம் சூழ் மணித்திரள்.
இரத்தின துவீபம்.
மாணிக்க கற்களிலா
சிவப்பு....
பாயும் கங்கைகளிலும்.
கைமுனுவும் எல்லாளனும்
பொருதிய போதே
பீறிட்டஇரத்தம்.
புத்தன் வந்த தேசம்.
தேசத்தின் ஆழ் மனப்படிவுகள்
குரோதங்கள் தானென்றால்
புத்தனாவது - சித்தனாவது...
முக்தி கூட இரத்தத்திலோ.
திக்கெங்கும் தெறிக்கின்றது.
இன்றைக்கும்.

துருவம் தப்பி
வந்த என்னை
அலாரம் அடித்தெழுப்பும்.
கடிகார முள்
ஓடு முன் ஓடி
தாவலில் ஏறி
துள்ளலில் இறங்க
மேல் மூச்சு வாங்கும்.
முழங்கால் சில்லுத் தேயும்.

ஊரினில் தீண்டாத
இழிசனப் பணிகளை
ஆலாய்ப்பறந்து
தலைகளிற் சுமக்க
கூலிகள் பெருகும்
பெருமையும் சேரும்.
சாதியத் தடிப்பிலும்
ஒரு சுற்றுப் பருக்கும்.

நாரி முறிய
கழுவித் துடைத்து
கழிவுகளைக் கொட்டி
சேவகம் செய்ய
வெண்தோல் மினுங்கும்
மூட்டுக்குள் வலிக்கும்.
ஆறு..இளைப்பாறென
உடல் சோரும்.
படுத்தெழும்ப இடம் தேடி
கண்ணயர,
குறண்டிக் கிடக்கும்
ஊரும் உறவும்
இனசன பந்தமும்
கால்களில் இடறும்.
நாளை நாள் விழுங்கும்
தவளைப்பாய்ச்சலில்
வாரம் இங்கு நாளாகும்.
கடிதம் ஏன் வரவில்லை.

மனிதம் சிறுமையுற
சூத்திரங்கள் அச்சுறுத்த
இயந்திரங்கள் காவு கொள்ளும்.

துருவங்கள் எதிரெதிராய்
துயரங்கள் சமாந்தரமாய்
இனி என்ன..
நிலவுக்கா தப்பிச் செல்வேன்.

மே91.

◎

www.tamilarangam.net



வெளியீடு :
கலை இலக்கிய வாசகர் வட்டம் , பாரிஸ்